பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 புரட்டாதி 08 செவ்வாய்க்கிழமை (24-09-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 220

# பரந்தனில் கடுஞ் சண்டை!

# ஞாயிறு 22 துருப்புகள் பலி!!

## புலிகள் 200 பேரை இழந்ததாக அரசுத் தரப்பில் நேற்று அறிவிப்பு

கொழும்பு, செப்ரெம்பர் 24

பரந்தன் இராணுவப் பாதுகாப்பு நிலைகளில் இருந்து ஸ்ரீலங்காப்படையினர் நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணியளவில் கிளிநொச்சி நோக்கி முன்னேறத் தொடங்கியதை அடுத்து அப்பகுதியில் கடுஞ் சண்டை மூண்டது.

முதல் நாள் சண்டையில் ஓர் அதிகாரி உட்பட 22 படையினர் பலியானதாகவும் 8 படையினர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது.

இச் சண்டையில் இருநூறுக்கும் அதிகமான விடுதலைப்புலிகள் உயிரிழந்திருக்கலாம் அல்லது காயமடைந்திருக்கலாம் எனத் தெரிவித்த நடவடிக்கைத் தலைமையகம் புலிகள் தரப்பில் உயிரிழந்தவர்களின் சரியான எண்ணிக்கையை அறிய முடியாதிருப்பதாகவும் தெரிவித்தது.

பீரங்கிப் படையினரினதும் விமானப் படையினரினதும் உதவியுடன் நகரத் தொடங்கிய அரச படைகள் பரந்தனில் இருந்து மூன்று கிலோ மீற்றர் தூரம் வரை முன்னேறியிருந்தார்கள் என்றும்—

விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்பை அவர்கள் சந்திக்க வேண்டியிருந்தது என்றும்—

நடவடிக்கைத் தலைமையகம் மேலும் தெரிவித்தது.

தாக்குதலின் முதல் நாள் கிளிநொச்சிக்கு இரண்டு கிலோ மீற்றர் தொலைவு வரை தாங்கள் முன்னேறியிருப்பதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர் என்று பி.பி.ஸி. அறிவித்தது.

கடந்த ஜூலையில் இடம் பெற்ற தாக்குதல் முயற்சியை அடுத்து—

கிளிநொச்சியைக் கைப்பற்ற அரசுத் துருப்புக்கள் எடுக்கும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### கிழக்கிலிருந்து புலிகள் கிளிநொச்சியில் குவிப்பு

பாதுகாப்புப் படையினரின் தாக்குதல்களை எதிர்கொள்வதற்காக கிழக்கு மற்றும் பிரதேசங்களில் இருந்து பெரும் எண்ணிக்கையான விடுதலைப் புலிகள் தருவிக்கப்பட்டு கிளிநொச்சியிலும் அதனைச் சுற்றி உள்ள பகுதிகளிலும் குவிக்கப்பட்டிருப்பதாக 'சண்டேரைம்ஸ்' பத்திரிகையில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

அதேசமயம் 81 எம்.எம். மோட்டார்கள் உட்பட அளவு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பொலன்னறுவை பகுதியில் தாக்குதல்

கடந்த சனிக்கிழமை மாலை பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள முத்தேனை என்ற இடத்தில் பாதுகாப்புப் படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் ஊர் காவலர் ஒருவரும் பொதுமகன் ஒருவரும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

(உ-3)

## யாழ்ப்பாணத்தில் கைதான 32 இளைஞர் வீரவிலவில்

### விரைவில் விடுதலை ஆவர்

கொழும்பு, செப். 24

''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையின் போது சந்தேகத்தின் பேரில் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட 32 தமிழ் இளைஞர்கள் வீரவில புனர் வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவர் என்று வீரவில முகாம் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார் என கொழும்புப்பத்திரிகைச்செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

[இ-3]

## வாழைச்சேனையில் எட்டுப் படையினர் பலி!

நேற்றுக் காலை மட்டக்களப்பு வாழைச்சேனைக்கு அருகில் நாவலடி முகாமில் இருந்து ரோந்து சென்றபடையினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் எட்டுப் படையினர் கொல்லப்பட்டனர்.

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகத்தை மேற்கோள் காட்டி இலங்கை வானொலி இத்தகவலை வெளியிட்டது.

ரோந்து சென்ற படையினரை புலிகள் முற்றுகையிட்டதாகவும் —

மேலதிக படையினர் தாக்குதல் நடைபெற்ற இடத்துக்கு விரைந்து முற்றுகையை முறியடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## புலிகளைத் தடை செய்யும் முயற்சி கைவிடப்பட்டது

### கதிர்காமர் எதிர்ப்பு காரணமாம்

கொழும்பு, செப். 24

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உடன்பாடு தெரிவிக்காததாலேயே விடுதலைப் புலிகளைத் தடை செய்ய எடுக்கப்பட்ட முயற்சி கைவிடப்பட்டதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

விடுதலைப் புலிகளைத் தடை செய்வதற்காக இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட முயற்சி தொடர்பாக வெளிநாட்டு இராஜதந்திர வட்டாரங்களின் நாடி பிடித்துப் பார்த்தலில் நல்ல சகுனம் தெரியவில்லை என்பதும் —

புலிகளைத் தடைசெய்வது புத்திசாலித்தனமான காரியமல்ல என்று அமெரிக்கத் தூதர் தமிழ்க் கட்சிப் பிரமுகர்களிடம் தெரிவித்ததும்—இந்த முயற்சியை கைவிடக் காரணமாக இருக்கலாம் என அந்தச் செய்திகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3)

# தெரிவுக் குழுவிலிருந்து வெளியேற ஐ.தே.க முடிவு?

கொழும்பு, செப். 24

அரசமைப்புத் திருத்தம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இருந்து வெளியேறுவது என்ற தீர்க்கமான முடிவை எடுக்கும் நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி உள்ளது.

அக்கட்சியின் உயர் வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''திவயின'' பத்திரிகை இவ்வாறு செய்தி வெளியிட்டிருக்கின்றது.

அத்தோடு எதிர்காலத்தில் அரசுக்கு எந்தவித ஒத்துழைப்பையும் வழங்குவதில்லை என்ற தீர்மானத்திற்கு அக்கட்சி வந்திருப்பதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த 20ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கவர்ச்சி நடிகை சிலுக்கு சுருக்கிட்டு தற்கொலை!

சென்னை, செப். 24

தென்னிந்தியாவின் பிரபல கவர்ச்சி நடிகையான சிலுக்கு சுமிதா நேற்று மாலை சென்னையில் உள்ள அவரது இல்லத்தில் தனது சேலை மூலம் மரத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். அவருக்கு வயது 35.

அவரது தலையணைக்குக் கீழ் தெலுங்கு மொழியில் எழுதப்பட்ட கடிதம் ஒன்று கண்டெடுக்கப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அக்கடிதத்தில் தான் பலர் மீது அன்பு வைத்திருந்ததாகவும் —

ஆனால் தன்னை எவரும் ஆதரிக்கவில்லை என்றும்—

சிலுக்கு சுமிதா தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாராம்.

கவர்ச்சிப் புயலாக ''வண்டிச் சக்கரம்'' என்னும் படத்தின் மூலம் அறிமுகமான சிலுக்கு சுமிதா 1990 க்கு முற்பட்ட காலப்பகுதியில் தமிழ்ப் படவுலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியவர். தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி உட்பட சுமார்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### தென் இந்தியரான நரசிம்மராவுக்குப் பதிலாக

# வட இந்தியரான சீதாராம் கேசரி காங்கிரஸ் தலைவராகத் தெரிவு

புதுடில்லி, செப். 24

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியை நரசிம்மராவ் இராஜினாமாச் செய்திருப்பதை அடுத்து —

கட்சியின் பொருளாளராக இதுவரை பணியாற்றிவந்த சீதாராம் கேசரி (வயது 70) இடைக்காலத் தலைவராக நேற்று ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

நேற்று மாலை நரசிம்ம ராவின் இல்லத்தில் — அவரது தலைமையின் கீழ் — நடைபெற்ற காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் இத்தெரிவு இடம்பெற்றது.

இடைக்காலத் தலைவர் ... காங்கிரஸ்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றவாளிகளாகக் காணப்பட்ட பொலீஸார் இன்னும் சேவையில்

## பலருக்கு பதவி உயர்வும் கிடைத்தது

கொழும்பு, செப். 24

கடத்தல், சித்திரவதை செய்தல், மனிதஉரிமைகளை மீறல் உட்பட பல குற்றச் சாட்டுக்களில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட பொலீஸ் அதிகாரிகள் நாட்டில் உள்ள பல்வேறு பொலீஸ் நிலையங்களில் தொடர்ந்து சேவையில் இருந்து வருகின்றனர்.

இப்படியானவர்களை சேவையில் வைத்திருப்பது பொலீஸ் சட்டங்களுக்கு முரணானது என்று சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இப்படியானவர்களில் 3பிரதிப் பொலீஸ்மா அதிபர்கள், 10 சிரேஷ்ட பொலீஸ் சுப்பிரிண்டன்கள், 15 பொலீஸ் சுப்பிரின்டன்கள், 40 உதவி பொலீஸ் சுப்பிரின்டன்கள், 20 இன்ஸ்பெக்டர்கள் மற்றும் பொலீஸ் கான்ஸ்டபிள்கள் அடங்குவர் என்றும்—

இவர்களில் பெரும்பாலானவர்கள் சித்திரவதை, கடத்தல் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களின் நிமித்தம் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப் பட்டவர்கள் என்றும்—

இவர்களில் சிலர் நீதிமன்ற தீர்ப்புக்கு இணங்க பாதிக்கப்பட்டவர்களுக்கு அபராதம் மற்றும் நஷ்டஈடு செலுத்த வேண்டிய நிலையில் இருந்து வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான அபராதங்களும், நஷ்டஈடுகளும் குற்றம் இழைத்த பொலீஸார் சார்பில் அரசாங்கமே செலுத்த வேண்டி உள்ளது.

இப்படி குற்றவாளியாகக் காணப்பட்ட சில பொலீஸ் அதிகாரிகள் பதவி உயர்வு பெற்ற சம்பவங்களும் உண்டு.

இப்படி அவர் மேலும் கூறினார்.

நீதிமன்றத்தினால் குற்றவாளிகளாகத் தீர்க்கப்பட்ட சில பொலீஸ் அதிகாரிகள் பதவி உயர்வு பெற்றது ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் நடந்தது என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பதாகவும் —

எதிர்க்கட்சி உறுப்பினரான பெண் உறுப்பினர் ஒருவருக்கு குற்றம் இழைத்த சம்பவத்திலேயே அவர்கள் குற்றவாளிகளாகத் தீர்க்கப்பட்டனர் என்றும் ''வீக் கென்ட் எக்ஸ்பிரஸ்'' தெரிவித்தது. (இ)




# சிவா பான்ஸி பலஸ்

மங்கையருக்குத் தேவையான

★ அழகுசாதனப் பொருள்கள்,
★ தங்கமுலாமிடப்பட்ட ஆபரண வகைகள்,
★ தையல் அலங்காரத்துக்கான லேஸ், பட்டின், நூல், சிப்ஸ் வகைகள்,
★ குழந்தைகளுக்கான விளையாட்டுச் சாதனங்கள்,
★ அன்பளிப்புப் பொருள்கள்

ஆகியவற்றை ஒரேஇடத்தில் தரமாகப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

**சிவா பான்ஸி பலஸ்**

185, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(சி/3171)


சுன்னாகம் தெற்கு

## காந்திரூபன் சனசமூக நிலைய புதிய நிர்வாகிகள் தெரிவு

சுன்னாகம் தெற்கு காந்திரூபன் சனசமூக நிலைய புதிய நிர்வாகிகள் தெரிவு 28 - 08 - 1996 அன்று நடைபெற்றது.

நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டோர்:

| | |
|---|---|
| தலைவர்: | திரு செ. தவராஜா |
| உப- தலைவர்: | திரு. சு. சிறீதரன் |
| செயலாளர்: | திரு. க. அல் ?றட் |
| உப- செயலாளர்: | திரு. பி. சகாயம் |
| பொருளாளர்: | திரு. த். தர்மதாஸ் |
| உப- பொருளாளர்: | திரு. நா. சுப்பையா |
| நிலையப் பரிசோதகர்: | திரு. சி. சவுந்தரராசா |

நிலைய நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டோர்:

| | |
|---|---|
| மு. குணசிங்கம் | பி. வலன்டன் சுரேஸ் |
| பொ. லோறன்ஸ் | பி. அரியராசா |
| கு. ஜெகதீபன் | சு. ரவிச்சந்திரன் |
| கு. சுதாகர் | ஆ. தவராசா |
| செ. அன்ரனி பர்நாந்து | இ. குலனேஸ்வரன் |
| மா. ஜெயக்குமார் | |

செ. தவராஜா
தலைவர்

(42844)

## கண்ணீர் அஞ்சலி

தெல்லிப்பளை ப. நோ. கூட்டுறவுச் சங்க நீண்டகாலப் பணியாளராகக் கடமையாற்றிய

**திரு. சி. சாந்தலிங்கம்**

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் —

அன்னாரின குடும்பத்தினருக்கும், சுற்றத்தவர்களுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தெல்லிப்பளை ப. நோ. கூட்டுறவுச் சங்கம்
தலைவர், பணிப்பாளர், பணியாளர்கள்,
பணியாளர் நலன்புரிச் சங்கம்,
சிக்கன சேமிப்பு கடன் உதவு கூட்டுறவுச் சங்கம்,
கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்.

(42838)

## தொலைக்கல்வி பயிலும் ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், செப். 24

தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி இறுதிப் பரீட்சைக்கு (பகுதிI, பகுதிII) தோற்றும் வடமராட்சியில் உள்ள சகலரையும் —

நாளை புதன் கிழமை பி.ப. 2.30 மணிக்கு அல்லது வியாழக்கிழமை மு.ப10 மணிக்கு—

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிக்கு சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

★ ★ ★

தொலைக்கல்வி ஆசிரியர் இறுதிப் பரீட்சைக்கு (பகுதிI, பகுதிII) தோற்றும் வட்டுக்கோட்டை நிலையத்தைச் சேர்ந்த சகலரையும் —

எதிர்வரும் வெள்ளிக் கிழமை 27ஆம் திகதி பி. ப. 2மணிக்கு —

மானிப்பாய் இந்துக்கல்லூரிக்குச்சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ)

## வன்னியில் சிக்கியுள்ள அரச ஊழியர்

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் தற்சமயம் தங்கியுள்ள யாழ். மாவட்ட அரச ஊழியர்களும், அவர்களது குடும்பத்தினரும் எதிர்வரும் 27 ஆம், 28 ஆம் திகதிகளில் வவுனியா வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சமார் 200 பேர் இதில் அடங்குவர்.

30 ஆம் திகதி திருமலையில் இருந்து புறப்படும் கப்பலில் இவர்கள் யாழ்ப்பாணம் செல்[illegible] [illegible] டது. (இ-3)

# மரண அறிவித்தல்கள்

## தம்பாபிள்ளை இராசரட்ணம்

உயரப்புலம், ஆலடி ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பாபிள்ளை இராசரட்ணம் 22-09-96 இல் காலமானார்.

அன்னார் விஜயலக்சுமியின் அன்புக் கணவரும், அருள்நங்கை (புதிய உயர்கல்லூரி அதிபர்), பாலபாஸ்கரன், அருள்வேல், கமலாம்பிகை, இராஜநங்கை, செந்தில் குமரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும். சண்முகநாதன், ராஜி, செல்வரஞ்சன், சிவபாலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பாலகார்த்திகா, பாலமயூரா, பாலரஜீவன், சர்மிலா, ஜெசந்தன், சிந்துஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-09-96 இல் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கரையாம்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
இ. விஜயலக்சுமி
(மனைவி)

ஆலடி,
ஆனைக்கோட்டை.

(42831)

## வேலுப்பிள்ளை சண்முகநாதன்

காரைநகர் மாப்பாணவூரியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சண்முகநாதன் அவர்கள் 19-09-96 இல் காலமானார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிங்கப்பூரைச் சேர்ந்த இராமநாதன், முருகேசு, கந்தப்பு ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20 - 09 - 96 இல் காரைநகரில் நடைபெற்றன.

தகவல்:
மனோன்மணி (மனைவி)
மு. சிவபாலன் (பெறாமகன்)

(42834)

## திருமதி தணிகாசலம் இராஜேஸ்வரி

பருத்தித்துறை பத்திரகாளி ஒழுங்கை— ஓய்வு பெற்ற அதிபர் திருமதி தணிகாசலம் இராஜேஸ்வரி கடந்த 20 ஆம் திகதி காலமானார்.

அன்னார் திரு. ந. தணிகாசலம் (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்புத் துணைவியாரும், திரு. கோவிந்தபிள்ளை கந்தப்பா — திருமதி. கந்தப்பா சின்னத்தங்கம் ஆகியோரின் புதல்வியும், திரு. கந்தப்பா பாலச்சந்திரன் (சட்டத்தரணி), திருமதி. ஈஸ்வரி பரமகுரு (ஆசிரியை யா/ M.G.H.S பருத்தித்துறை) ஆகியோரின் சகோதரியும், திரு. இரத்தினராஜ், திரு புவனராஜ் (கனடா), திரு. கிருஷ்ணராஜ், செல்வி காந்தா (கனடா), செல்வி விஜிதா (பட்டதாரி, விவசாயபீடம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வி. பரமகுரு ஜெயகுமாரி (ஆசிரியை, வட இந்து மகளிர் கல்லூரி) யின் பெரியம்மாவும், திரு. க. பரமகுரு (அதிகாரி, கல்விக் கோட்டம், பருத்தித்துறை) திருமதி. பா. நவமணி (ஆசிரியை, திருகோணமலை) ஆகியோரின் மைத்துனியும், திரு. பா. சகாதேவன் சகோதரர்கள் (திருகோணமலை), திருமதி. இ. கமலாதேவி (கொழும்பு), திருமதி. புவனராஜ் சுபாஜினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வன்கள் விநோத்ராஜ், மனோராஜ், செல்வி. ராதா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன. இறுதிக்கிரியையில் பங்கு கொண்டவர்கள், அனுதாபச் செய்திகள் தந்தவர்கள், உதவிகளைச் செய்தவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
திரு. ந. தணிகாசலம்
(கணவர்)

''முத்து மாளிகை''
பத்திரகாளி ஒழுங்கை,
பருத்தித்துறை.

(சி/3173)

## முருகேசு குணரத்தினம்

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. மு. குணரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர், கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்) 21.09.96 அன்று பதுளையில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு—தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், மனோன்மணியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை, கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும், பவானி, (ஆசிரியை, கொழும்பு), மாலினி (ஆசிரியை, செங்குந்தா இந்துக் கல்லூரி), வாசுகி (சரஸ்வதி மத்திய கல்லூரி, பதுளை), குணரூபன் (சுவிஸ்), ஜெயரூபன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அன்னரத்தினம். நேசரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியை), நவரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), ஞானரத்தினம், பவளரத்தினம், யோகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அழகரத்தினம், நாகரத்தினம் (ஆசிரியை, கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்), சிவபாக்கியம், இலங்கநாதன் (கடற்றொழில் பரிசோதகர், கடற்றொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22.09.96 இல் பதுளையில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
இ. இலங்கநாதன்
(மைத்துனர்)

பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(42843)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் ... நூலகம்

# வடக்கு - கிழக்கு இணைப்புக் குழு நியமனம்:
# பிள்ளையார் பிடிக்க குரங்கான கதை!

கொழும்பிலிருந்து வெளியாகும் ''தினமுரசு'' வார சஞ்சிகையின் செப்ரெம்பர் 22-28 வார இதழில் ''இராஜதந்திரி'' எழுதிய கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது. (ஆ-ர்)

வடக்கு — கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு.

ஜனாதிபதியினால் அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இக்குழு, வடக்கு — கிழக்குச் சர்ச்சையை மேலும் குழப்பி விடுவதாகவே இருக்கின்றது.

காரசாரமான அரசியல் பிரச்சினைக்குள்ளாகி, ஒரு நிரந்தரத்தீர்வை வேண்டியதாகவே வடக்கு — கிழக்குப் பிரதேசங்கள் இருக்கின்றன.

வடக்கு — கிழக்கு மாகாணங்களின் இணைப்பு நிரந்தரமானதாக இருக்கவேண்டும். இந்த இணைப்பின் அடிப்படையில் சமஷ்டி முறையைக் கொண்ட ஓர் அதிகாரப் பகிர்வு வடக்கு — கிழக்கில் இருக்கவேண்டுமென்பதே தமிழ் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடாக இருக்கின்றது.

இருந்த போதிலும் வடக்கு — கிழக்கில் பலம்மிக்க ஆயுதப் போராட்ட அமைப்பாக இருந்துவரும் தமிழீழ விடுதலைப்புலிகள் வடக்கு — கிழக்கு மாகாணங்கள் ஒரு தனிநாட்டுக்குரிய அம்சங்களுடன், பிரிந்து செல்ல வேண்டுமென்ற நிலைப்பாட்டுடன் இருக்கின்றனர்.

### குட்டையைக் குழப்பும் முயற்சி

இந்நிலையில் தமிழ் அரசியல் கட்சிகளின் சமஷ்டி முறையை அடிப்படையாகக் கொண்ட நிர்வாக அமைப்பு பற்றிய கோரிக்கை தொடர்பாகவும் எதுவித முடிவுகளையும் எட்டவில்லை. எல்.ரி.ரி.ஈ. யினருடைய அரசியல் நிலைப்பாடு பற்றியும்பேச்சுக்கள் நடத்தப்படவில்லை. இந்நிலையில் குட்டையைக் குழப்பிவிடும் பாங்கிலேயே வடக்கு — கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவை ஆட்சியாளர்கள் அமைத்துள்ளனர்.

### ஜனாதிபதியின் தனிப்பட்ட முடிவு

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் நியமனம் ஜனாதிபதியின் ஒரு தனிப்பட்ட முடிவாகவே இருக்கின்றது. இது பற்றி வடக்கு - கிழக்கைச் சேர்ந்த தமிழ் அரசியல் கட்சிகளுடன் எவ்வித கலந்தாலோசனைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

தமது நிறைவேற்று அதிகாரத்தின் அடிப்படையில் ஜனாதிபதி வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவை நியமித்துள்ளார். அக்குழுவின் தலைவராக அமைச்சர் அஷ்ரப்பையும், இணைத் தலைவராக வடக்கு- கிழக்கு ஆளுநர் காமினி பொன்சேகாவையும் ஜனாதிபதி நியமித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவை நியமித்துள்ளது பற்றித் தெரிவித்துள்ள காரணத்தில், ஒரு நிரந்தரத் தீர்வை எட்டும் வரையில் வடக்கு - கிழக்குப் பகுதியில் வாழுகின்ற மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்திலேயே இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நிரந்தரத் தீர்வு வெறும் மாயை

நிரந்தரத் தீர்வு என்பது வெறுமனே ஒரு மாயை என்பது தற்போது முன்பைவிட மேலும் உறுதியாகியுள்ளது.

தீர்வு முயற்சிகள் எவ்விதத்திலும் காத்திரமாக்கப்படவில்லை. இந்நிலையில் நிரந்தரத் தீர்வு என்பது எக்காலத்தில் சாத்தியமாகும் என்பது எவருக்குமே புரியாததாக இருக்கின்றது.

ஓர் ஆரோக்கியமான — இறுதியும் முடிவுமான தீர்வுக்காண நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் ஆட்சியாளர்கள் தயக்கம் காட்டுகின்றனர். ஆனால் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கி விடுவதாகவே ஒருங்கிணைப்புக்குழு போன்றவற்றின் நியமனம விளங்குகின்றது.

''பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக மாறிய கதை'' என்று சொல்லப்படுவதுண்டு.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கான தீர்வை எட்டுவது என்ற நோக்கில் இருந்து விலகி, அரசியல் தீர்வில் ஆர்வங்காட்டும் தமிழ்க் கட்சிகளை எள்ளிநகையாடுவதாக வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு விளங்குகின்றது.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ. பி. டி. பி.), ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்), தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன உட்பட ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஒரு தீர்வை முன் வைக்க வேண்டுமென்பதில் தீவிரமாக இருக்கின்றன.

வடக்கு- கிழக்குப் பிரச்சினை குறித்த பல்வேறு விடயங்களும் தமிழ் கட்சிகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டேவருகின்றன.

ஆனால் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு விடயத்தில் மட்டும் தமிழ் கட்சிகள் அணுகப் படவுமில்லை; அவற்றின் கருத்துக்கள் அறியப் படவுமில்லை.

### அஷ்ரப்பை நியமித்தது சரியானதா?

மாறாக வடக்கு - கிழக்கில் இயங்கும் மற்றொரு அரசியல் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கே வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவைத் தலைமை தாங்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. ஸ்ரீ.ல.மு.கா. வின் தலைவரான அமைச்சர் அஷ்ரப் அந்த ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராகவும் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைச்சரவைப் பொறுப்புகளுடன் சந்திரிகா அரசில் இடம் பெறலாம். ஆனால் அக்கட்சியும் வடக்கு- கிழக்குப் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டதாகும்.

ஒரு சமூகத்தையும், அச் சமூகத்தின் தனித்துவத்தைப் பேண வேண்டுமென்ற அடிப்படையிலுமே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி குரல் கொடுத்து வருகின்றது.

ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளுடன் சேர்ந்திராது தனது சொந்தப் பாணியில் ஸ்ரீ.ல.மு.கா. வடக்கு - கிழக்கில் முஸ்லிம் சமூகத்தவரது பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமென்பதில் ஆர்வங் காட்டுகின்றது.

எனவே முஸ்லிம்களையும், முஸ்லிம் சமூகத்தவர்களது தனித்துவங்களையும் மட்டுமே பேசிவரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை வடக்கு - கிழக்கின் பெரும் பான்மையான தமிழ் மக்களின் விடயங்களில் தலைமை தாங்க அனுமதிப்பது ஒரு நியாயமான நடவடிக்கையாக இருக்க முடியாது. இதன் மூலம் தமிழ் - முஸ்லிம் சமூகத்தவரிடையே சந்தேகங்களையும், அவநம்பிக்கைகளையும் ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கே ஆட்சியாளர்கள் தூபமிடுபவர்களாக இருக்கின்றனர்.

### பிரித்தாளும் தந்திரம்

ஆங்கிலேயர்கள் கையாண்டதே பிரித்தாளும் தந்திரம். இத்தந்திரத்தைப் பிரயோகித்ததன் மூலம் இனம், மதம் பிரதேசம் என்று பிளவுகளை ஏற்படுத்தி, அப் பிளவுகள் மூலமான பிணக்குகளைக் கையாண்டவாறு தமது ஆட்சியை ஆங்கிலேயர்கள் மேற்கொண்டனர்.



அப் பாணியிலேயே வடக்கு- கிழக்குப் பிரச்சினையும் இலங்கையின் ஆட்சியாளர்களால் அணுகப்படுகின்றது.

அன்றைய தமிழரசுக் கட்சியில் ஓர் உறுப்பினராக இருந்தவரே இன்றைய ஸ்ரீ. ல. மு. கா. தலைவர் எம். எச். எம். அஷ்ரப்.

வடக்கு-கிழக்கில் முஸ்லிம்கள் ஒரு தனித்துவம் மிக்க சமூகத்தவர்களாக இருப்பது உண்மையே. அவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையிலான அரசியல் பிரச்சினைகள் பொதுவானவையாகவே இருந்து வருகின்றன. தமிழைப் பேசுபவர்கள் என்ற ரீதியில் இரு சமூகத்தவர்களும் வடக்கு—கிழக்கில் ஓர் அரசியல் தீர்வுக்காகப் போராட வேண்டியவர்களாகவுள்ளனர்.

கடந்த கால ஆட்சியாளர்கள் கையாண்ட நயவஞ்சகத்தனமான நடவடிக்கையினாலேயே இன்று வடக்கு—கிழக்கில் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் தம்மிடையே வேறுபாடுகளைக் கொண்டுள்ளன.

இந்த இரு சமூகங்களையும் பிரிப்பதன் மூலம் வடக்கு— கிழக்கின் அரசியல் காத்திரத் தன்மையைச் சிதைத்து விடுவதே பேரினவாதிகளின் தந்திரமாக இருந்தது.

துரதிர்ஷ்டவசமாக தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளும் இத்தந்திரத்துக்கு இரையாகி அரசியலில் குளறுபடியான நிலைக்கு முகங் கொடுத்துள்ளனர்.

தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையே அவநம்பிக்கைகள், சந்தேகங்களை மேலும் உண்டு பண்ணுவதாகவே வடக்கு — கிழக்கு ஒருங்கிணைப்புக்குழுவின் நியமனம் விளங்குகின்றது.

### ஆடு — ஓநாய் கதை

அரசியல் தீர்வு காணப்படும் வரை வடக்கு —கிழக்கு மக்களின் அன்றாடத் தேவைகள், மற்றும் அவர்களது நிர்வாக ரீதியான பிரச்சினைகள் புறக்கணிக்கப்படலாகாது என்பதனாலேயே வடக்கு — கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு அமைக்கப்பட்டதாக ஆட்சியாளர்கள் கூறுகின்றனர்.

இக்கூற்றை அவதானிக்கும் போது 'ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுத' கதையே ஞாபகத்துக்கு வருகிறது.

வடக்கு — கிழக்கு மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பதாலேயே வடக்கு — கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு நியமிக்கப்பட்டதாக ஆட்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் வடக்கு — கிழக்கு மக்கள் இன்று பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் மட்டும். கஷ்டப்படவில்லை. கடந்த 17 வருடகால யுத்தத்தினால் தொடர்ச்சியாகச் சொல்லொணாக் கஷ்டங்களுக்கு அவர்கள் முகங்கொடுத்துள்ளார்கள்.

அவர்கள் படுகின்ற கஷ்டங்கள், துன்பங்களுக்கு ஒரு நிரந்தரத்தீர்வே தேவை. எந்தவொரு இடைக்காலத் தீர்வோ, தற்காலிகத்தீர்வோ அம்மக்களை அவர்களது கஷ்டங்களிலிருந்து மீட்டுவிடமாட்டா.

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு அரசியல் சார்பற்றதென ஆட்சியாளர்கள் தெரிவிக்கலாம். ஆனால் ஏற்கனவே வடக்கு— கிழக்கில் நிர்வாக இயந்திரத்தை உடைத்தெறியப் போவதாக எல்.ரி.ரி.ஈ. யினர் சூளுரைத்துள்ளனர்.

இந்நிலையில் வடக்கு — கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு மூலமாக அரசு எதிர்பார்ப்பவற்றை நிறைவேற்ற முடியுமா என்பது சந்தேகமே.

எது எப்படியிருந்த போதிலும் ஒன்றைமட்டும் ஆட்சியாளர்கள் உணர்ந்துள்ளதை வடக்கு —கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு என்ற விடயம் தெளிவாக்கியுள்ளது.

வடக்கு—கிழக்கு மாகாணங்கள் ஒருங்கிணைந்தவையாக — ஒரே பிரதேசமாகவே — இருக்க முடியும் என்பதை ஆட்சியாளர்கள் உணரத் தலைப்பட்டுள்ளதையே இந்த ஒருங்கிணைப்புக்குழு மூலம் அவதானிக்க முடிகின்றது. ★

---

# இணைப்புக்குழு நியமனம்: ஆளுநருக்கு வந்த சீற்றம்!

கடந்த 11ஆம் திகதி— வடக்கு-கிழக்கு மாகாண சிவில் நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இணைப்புக்குழு அமைக்கப்பட்டது பற்றிய செய்தி வெளியாகிய தினம்.

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா தனது வீட்டிலிருந்து மளமளவென்று ராஜினாமா கடிதம் எழுதிக்கொண்டிருந்தார்.

ஆளுநரான அவரை ஒருங்கிணைப்புக் குழுவுக்கு செயலாளர் என்று அறிவித்தது தான் கோபத்துக்குக் காரணம். அது அவரது தகுதியைக் குறைப்பது போன்ற நடவடிக்கை தான்.

அதுமட்டுமல்ல, வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநரான அவரிடமே அந்த மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் ஒரு முக்கிய நடவடிக்கை தொடர்பாக ஆலோசனை கேட்கப்படவில்லை.

ஒருங்கிணைப்புக் குழு தொடர்பாக அறிவிப்பு வெளியானதும் ஜனாதிபதியைத் தொடர்பு கொள்ள முயன்றாராம் ஆளுநர் காமினி பொன்சேகா. முடியவில்லை. அதனால்தான் ராஜினாமா செய்யும் முடிவுக்குச் சென்றார்.

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், மாகாண ஆளுநரை செயலாளராக நியமித்தது தகுதிக்கு குறைவான விடயம் மட்டுமல்ல, சட்டப்படியே தவறான செயலாம். ஜனாதிபதிக்கு யார்தான் அப்படி ஒரு தவறான ஆலோசனையைச் சொன்னார்கள்? என்று முடியைப் பிய்த்துக் கொள்கின்றன அரசியல் வட்டாரங்கள்.

சட்டச்சிக்கல் பற்றி காலதாமதமாகத் தான் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறப்பட்டது. அதன்பின்னரே ஆளுநர் காமினி பொன்சேகாவை ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவராக நியமித்தார் ஜனாதிபதி. அதாவது அமைச்சர் அஷ்ரப்புக்கு சமமான பதவி ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஆரம்பமே அவசரத்தில் அள்ளிப்போட்ட கோலம்போன்றே அமைந்திருக்கிறது. முதற் கோணல் முற்றும் கோணல் என்பது ஒருங்கிணைப்புக் குழு விவகாரத்திலும் பொருந்தலாம்.

ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக யாரை நியமிக்கலாம்; யாரை நியமிக்கக் கூடாது என்பது தேவையில்லாத சர்ச்சை.

ஏனெனில் குறிப்பிட்ட ஒருங்கிணைப்புக் குழுவே ஒரு கண்துடைப்பு நடவடிக்கைதான்.

வடக்கு - கிழக்கில் அரசாங்கம் புனரமைப்புப் பணிகளைச் செய்கிறது என்று வெளியுலகுக்குச் சொல்வதற்கும், காட்டுவதற்கும் செய்யப்பட்டுள்ள ஏற்பாடே இதுவாகும்.

---

# தென்னிந்திய திருச்சபை ஆதீன விழா

யாழ்ப்பாணம், செப். 24

தென்னிந்திய திருச்சபையின் அத்தியட்சாதீன விழா எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு வட்டுக்கோட்டை பேராலயத்தில் ஆரம்பமாகும்.

இந்த விழாவில் அளவெட்டி, சண்டிலிப்பாய் ஊழியன் அருளானந்தம் தேவகுணானந்தன், ஏழாலை வடக்கு, ஏழாலை தெற்கு ஊழியன் அருளானந்தம் கிங்ஸ்லி சுரேந்திரன் ஆகியோர் உதவிக் குருக்களாக அபிஷேகம் பெறுவர்.

செரம்பூர் பல்கலைக்கழகத்தின் கலாநிதிப் பட்டம் பெற்ற முன்னாள் பேராயர் டி. ஜே. அம்பலவாணர் அவர்களும் —

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலாநிதிப்பட்டம் பெற்ற செல்வி சி. வி. செல்லையாவும் இந்த விழாவில் கௌரவிக்கப்பட உள்ளனர்.

இதற்கு முதல் நாளான 27 ஆம்திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு தென்னிந்திய திருச்சபையின் வருடாந்தக்கூட்டம் நடைபெறும். பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் தலைமைப் பேருரை நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து ஏனைய நிகழ்வுகள் இடம்பெறும்.

# வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

கொழும்பு, செப். 25

கடந்த சில வாரங்களாக மேற்கொண்ட வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுள்ளதாக நில அளவையாளர் சங்கம் நேற்று அறிவித்தது. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். விஜயத்துக்கான அழைப்பை ஏற்க புளொட், ஈ.பி.டி.பி. மறுப்பு

கொழும்பு, செப். 24

யாழ். குடாநாட்டுக்குச் செல்லுமாறு அரசுத் தரப்பில் விடுக்கப்பட்ட அறிவிப்பை புளொட், ஈ.பி.டி.பி. கட்சிகள் மறுத்து விட்டதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

இது குறித்து அப்பத்திரிகை மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். குடாநாட்டுக்கு தமிழ்க் கட்சிகள் செல்வதற்கு அனுமதி வழங்குவதற்கு அரச தரப்பில் முன்னர் தயக்கம் காட்டப்பட்டமை தெரிந்ததே.

புளொட், ஈ.பி.ஆர் எல். எப்., ஈரோஸ், ரெலோ. ஈ.பி.டி.பி. ஆகிய ஐந்து கட்சிகள் யாழ் சென்று அங்குள்ள நிலவரத்தைக் கண்டறிந்து வருவதற்கு தமது பிரதிநிதிகளை அனுப்ப முடிவெடுத்தன: இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் அனுமதியையும் கோரியிருந்தன.

பாதுகாப்புக் காரணங்களுக்காக என்று கூறப்பட்டு அனுமதி வழங்கப்படுவது தாமதிக்கப்பட்டது.

இதேவேளை யாழ். குடாநாட்டுக்கு தமிழ்க் கட்சிகள் ஆயுதங்களுடன் செல்ல முடியாது என்றும் அரசாங்கத்தால் கூறப்பட்டது.

சமீபகாலத்தில் யாழ். நிலவரம் திருப்திகரமாக இல்லை என்று செய்திகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

யாழ். குடாநாட்டில் மனித உரிமை மீறல்கள் நடைபெற்று வருகின்றன; வகை தொகையற்ற கைதுகள் இடம்பெற்று வருகின்றன; கைது செய்யப்பட்ட சிலர் காணாமல் போயுள்ளனர்.

ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் பெருமளவில் கைது செய்யப்படுவதாகவும் செய்திகள் கிடைத்து வருகின்றன.

கடந்தவாரம் ஜனாதிபதி சந்திரிக்கா ஈ.பி.டி.பி, புளொட் ஆகிய கட்சிகளை அழைத்துப் பேச்சு நடத்தினார்.

இரண்டு கட்சிகளும் யாழ். செல்ல விரும்பினால் அரசாங்கம் அனுமதி வழங்கும்; சொந்தப் பாதுகாப்புக்கான ஆயுதங்களையும் கொண்டு செல்ல முடியும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா, புளொட் தலைவர் சித்தார்த்தன் இருவரும் அரசாங்கத்தின் கோரிக்கை தொடர்பாக தாம் உடனடியாகப் பதில் சொல்ல முடியாது என்று ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

"யாழ். குடாநாட்டில் ஈ.பி.டி.பி. யின் பெயரைப் பயன்படுத்தி ஆள்கடத்தல்கள் நடைபெற்றுள்ளன. இது யாழ். குடாநாட்டு மக்களிடம் தமிழ் அமைப்புக்கள் தொடர்பாக தவறான அபிப்பிராயத்தை உருவாக்கும் திட்டமிட்ட நடவடிக்கையாகும். இதற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்று டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் புகார் தெரிவித்தார்.

"யாழ். குடாநாட்டில் தற்போதுள்ள நிலை வரவேற்கக் கூடியதாக இல்லை. இந்நிலையில் நாம் யாழ். சென்றால் பழியெல்லாம் நம் தலை மீது விழுந்துவிடும். எனவே இது குறித்து எமது கட்சியினருடன் பேசிவிட்டே முடிவு சொல்ல முடியும்" என்று புளொட் தலைவர் சித்தார்த்தன் ஜனாதிபதியிடம் கூறினார்.

இச்சந்திப்பில் ஜனாதிபதியுடன் இராணுவத் தளபதியும், ஜனாதிபதியின் செயலாளரும் கலந்துகொண்டனர்.

புளொட், ஈ.பி.டி.பி. வட்டாரங்களுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, 'தற்போதைய நிலையில் யாழ்ப்பாணம் செல்வதற்குத் தாம் விரும்பவில்லை' என்று தெரிவித்தன.

—இவ்வாறு அப்பத்திரிகை தெரிவித்தது. (உ)

## கைது செய்ய ஜனாதிபதி உத்தரவு

நீர்கொழும்பில் ஐ.தே.க. ஆதரவாளர்கள் மீதான துப்பாக்கிச்சூட்டுச்சம்பவத்துடன் தொடர்புடையவர்களை உடனடியாக கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொலிஸ்மா அதிபரைப் பணித்துள்ளார்.

# பாதுகாப்பு செலவினம் அடுத்தவருடம் குறையும்

## ஜனாதிபதி அறிவிப்பு

"அடுத்த வருடம் பாதுகாப்புக்கான செலவினம் குறைக்கப்படும். அத்தோடு அரசாங்க செலவினமும் கட்டுப்படுத்தப்படும்."

இப்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் விசேட செயற்குழுக்கூட்டம் கடந்த சனிக்கிழமை அலரிமாளிகையில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் பொருளாதார முன்னேற்றம், மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் குறித்து ஜனாதிபதி புள்ளி விவரங்களுடன் இக் கூட்டத்தில் எடுத்துக் கூறினார்

கடந்த இரு வருடங்களாக அரசாங்கம் வடக்கு - கிழக்கு யுத்தத்துக்கு தேவையான ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கென பெருந்தொகையான நிதியை செலவிட்டுள்ளது.

ஆகையால் ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கென்று அடுத்த ஆண்டு பெருந்தொகையான நிதியைச் செலவிடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாது. இதனால் பாதுகாப்புக்கான செலவினம் குறைந்து விடும் அத்துடன் அடுத்த வருடம் அரசாங்க செலவினமும் கட்டுப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி கூறினார்.

அரசாங்கத்தின் மூன்றாவது வரவு - செலவுத்திட்டத்தில் ஏற்படும் பற்றாக் குறையை நிவர்த்தி செய்வது தொடர்பாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் பல யோசனைகளை கூட்டத்தில் முன்வைத்தன.

# சட்டியிலிருந்து அடுப்புக்குள் விழுந்த நிலையில் யாழ்ப்பாண அகதிகள்

## உபாலி நிறுவன செய்தியாளர் பி.பி. சிக்கு பேட்டி

கொழும்பு, செப் 24

யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னிக்கும் பின்னர் வன்னியில் இருந்து வவுனியா நகருக்கும் சென்றுள்ள யாழ். அகதிகள் சட்டியிலிருந்து அடுப்புக்குள் விழுந்த நிலையில் உள்ளனர்.

உபாலி பத்திரிகை நிறுவனத்தின் வவுனியா பகுதி பிரதம செய்தியாளர் ஜினசேன ரதுகமகே பி.பி.ஸி சிங்களச் சேவைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:

சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கையை தொடர்ந்து யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு வந்து அதன் பின்னர் அங்கிருந்து வவுனியா வந்துள்ள யாழ். அகதிகளை பஸ்கள் மூலம் திருகோணமலைக்கு அனுப்புகிறார்கள்.

வவுனியாவிலுள்ள புள்ளி விவரங்களின் படி யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதற்காக 2,800 அகதிகள் திருகோணமலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இவர்களில் 680 பேர் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படாததால் திருகோணமலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலையில் தங்க வைக்கப்பட்டுள்ள அகதிகளுக்கு சமைத்த உணவுக்குப்பதிலாக அதிகாரிகள் பணம் வழங்குகிறார்கள். வயதுவந்தவர்களுக்கு 50ரூபா வீதமும் சிறுவர்களுக்கு 30 ரூபா வீதமும் வழங்கப்படுகிறது.

சாதாரண கூலியாளரின் நாள் சம்பளம் 150 ரூபாவாக இருந்த போதிலும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாது அவன் அவதிப்படுகிறான்.

இந்த நிலையில் நாங்கள் எப்படி இந்த 50 ரூபாவில் உலர் உணவுப் பொருள்களையும், தேநீர் தயாரிப்பதற்கான பொருள்களையும் வாங்க முடியும் என அங்கு தங்கவைக்கப்பட்டுள்ள அகதிகள் குரல் எழுப்புகிறார்கள்.

வவுனியாவில் பாதுகாப்பு வலயத்துக்குள் இருக்கும் பொதுமக்களுக்கு இராணுவத்தாலும் பொலிசாராலும் பாதுகாப்பு வழங்க முடியாத நிலையில் வடபகுதிக்கு வருமாறு அழைக்கப்படுபவர்களுக்கு எவ்வாறு பாதுகாப்பு வழங்க முடியும் என்ற ஐயம் எழுகிறது.

தாங்கள் மூன்றாவது முறையும் அகதிகளாகியுள்ளோம் என்ற உணர்வு யாழ். அகதிகளுக்கு ஏற்பட்டுள்ளதை அவர்களின் கருத்துக்களில் இருந்து அறிய முடிகிறது.

இப்படி அவர் தெரிவித்தார்.

(இ-10)


மீண்டும் ஆரம்பம்

பிரத்தியேக வகுப்புகள்

கணக்கியல்

திரு. நிதி

A/L 97, 98

ஆரம்பம்: 27-09-1996 (வெள்ளி)

பிற்பகல் 4-30 மணி.

மது கல்வி நிறுவனம்

டச்சு வீதி, கல்வியங்காடு.

(ஞானபாஸ்கரோதயா ச. ச. நிலையத்திற்கு அருகில்)

★ 97 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு முழுப் பாடத்திட்டமும் பூர்த்தியாக்கப்படும்.

(42829)



சேவை நலன் பாராட்டு

திரு. சுப்பையா சண்முகராசா

(பயிற்சி பெற்ற ஆசிரியர்)

(யா / கொக்குவில் மேற்கு சி. சி. த. க. பாடசாலை)

யா/வண். நாவலர் பாடசாலையில் முதல்நியமனம் பெற்று கடந்த 35 வருடங்களாக இலங்கையின் பிற மாவட்டங்கள் பலவற்றில் சிறந்த ஆசிரியராகவும் உப அதிபராகவும் விளங்கி, கடந்த ஐந்து வருடங்களாக எமது பாடசாலையின் வளர்ச்சியில், மாணவர்களின் உடல் உள வளர்ச்சியில் பாடசாலைப் பிற வேலைகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் சேவையாற்றி, தமது 58 ஆவது வயதில் ஓய்வு பெறும் நல்லாசிரியப் பெருந்தகையை சீரும் சிறப்பும் பெற்று நோய் நொடியின்றி பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர்.

கொக்குவில் மேற்கு, சி. சி. த. க. பாடசாலை.

(42835)



ஓவியம் படைத்திடுவீர்!

AHC

உலக உளநல நாள் ஒக்ரோபர் - 10

★ மேற்படி நாளையொட்டி 'சாந்திகம்' உதயன் ஆதரவில் ஓவியப்படைப்புகளுக்கான களம் அமைக்கின்றது.

★ உங்களது ஓவியத்துவமான துலங்கல்களுக்கு பின்வரும் வாசகங்கள் தூண்டிகளாக அமையட்டும்.

★ மானசிகம் ★ மனத்தவம் ★ மனோதரிசனம்

★ மானச சஞ்சாரம் ★ மனவெளி

★ மேற்படி தூண்டிகளில் ஒன்றினை உங்களது படைப்பின் தொனிப்பொருளாகப் பொறிக்கவும்.

★ படைப்புகள் 25'' x 18'' அளவினதாக அமைய வேண்டும்.

★ ஆர்வமுள்ள அனைவரும் பங்கு கொள்ளலாம்.

★ ஓவிய வகைகளையும், ஓவியசாதனங்களையும் விரும்பியபடி தெரிவு செய்யலாம்.

★ படைப்பினை உங்களது பெயர், முகவரியோடு 20-10-96 - க்கு முன்னதாக பின்வரும் இடங்களில் சேர்ப்பிக்கவும்:

உதயன் பணிமனை, 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

சாந்திகம், இல. 15, கச்சேரி நல்லூர் வீதி, சுண்டுக்குளி.

உளநல சிகிச்சை நிலையம், யாழ். போதனா வைத்தியசாலை.

★ தெரிவு செய்யப்படும் கலைஞர்கள் கௌரவிக்கப்படுவர்.

★ முதலாவது தெரிவு — ரூ 5,000/-

★ இரண்டாவது தெரிவு — ரூ 3,000/-

★ மூன்றாவது தெரிவு — ரூ 2,000/-

★ தெரிவுக்குழுவின் தீர்ப்பே இறுதியானது.

★ சாந்திகம், உதயன் நிறுவனங்களில் பணிபுரிவோரும், அவர்களது குடும்ப உறுப்பினர்களும் பங்குபற்ற முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனிமுஸ்லிம்களின் பள்ளிவாசலுக்குள் ஷியா முஸ்லிம்கள் துப்பாக்கிச் சூடு!

## பாகிஸ்தானில் 16 பேர் பலி!!

பாகிஸ்தானில் சுனி — ஷியா முஸ்லிம்களுக்கிடையிலான மோதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தின் முல்டான் நகரில் சுனி முஸ்லிம்களின் பள்ளிவாசல் ஒன்றுக்குள் புகுந்து ஷியா முஸ்லிம்கள் நேற்று முன்தினம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த 16 சுனி முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். பலர் காயம் அடைந்தனர்.

இறந்தோரில் 10 பேர் பள்ளிவாசலுக்குள்ளேயே இறந்தனர். ஏனைய அறுவரும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது மரணமடைந்தனர். காயமடைந்தவர்களிலும் பலரின் நிலைமை இன்னும் கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்துக்கு முதல் நாள் முல்டான் நகருக்கு அருகில் உள்ள நகரம் ஒன்றில் ஷியா முஸ்லிம் தலைவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

இதற்குப் பழிவாங்கும் முகமாகவே சுனி முஸ்லிம்களின் பள்ளிவாசலுக்குள் தாக்குதல் இடம்பெற்றிருக்கலாம் என்று பி. பி. ஸி. தெரிவித்தது. (இ)

# உலகிலேயே சிறிய நாடு!

வத்திக்கான், செப். 24

வத்திக்கான் நாடு ஐரோப்பாவிலுள்ள இத்தாலி நாட்டின் தலைநகரான ரோமாபுரியில் உள்ளது. வத்திக்கான் என்பது மிகச் சிறிய நாடு. 1929 ஆம் ஆண்டு வத்திக்கான் ஒரு நாடாக உருவானது. 108 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட இந்த நாட்டுக்கென்றே நாணயங்கள், தபாற் தலைகள், சிறு ரயில் நிலையம், வெளியுறவுத்துறை, உள்துறை எல்லைகள் போன்றவை உள்ளன.

இது அமைதியையும், நட்பையும் விரும்பும் நாடு என்பதால் அதற்கென இராணுவம் கிடையாது. ஆயுதங்களுக்கென ஒரு சதத்தையும் அந்நாடு செலவிடுவதில்லை. ஏழ்மை, அநீதி, ஒழுக்கக்கேடு போன்றவைகளுக்கு எதிரான போரைத்தான் கடந்த 2000 ஆண்டுகளாக வத்திக்கான் தலைமைப்பீடம் ஆற்றிவருகிறது. (இ–10)

## தலை துண்டித்து மரண தண்டனை

டுபாய், செப். 24

டுபாயில் இந்தியர் ஒருவரைக் கொலை செய்த பாகிஸ்தானியர் ஒருவரின் தலை கடந்த வாரம் துண்டிக்கப்பட்டது.

இவ்வாண்டில் 29 பேருக்கு தலைதுண்டிக்கப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. (இ-10)

## கிறீஸில் இடதுசாரிகள் ஆட்சி

ஏதென்ஸ், செப். 24

அரசியல் சித்தாந்தங்களையும் சிந்தனைகளையும் உலகுக்குத் தந்த கிறீஸ் நாட்டில் நடைபெற்ற தேர்தலில் ''பார்ஷோக்'' என்ற இடதுசாரிக்கட்சி ஆட்சியைப் பிடித்துள்ளது.

கோத்தா சிமித்திரிஸ் என்பவர் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். (இ–10)

## கிளின்ரன் - பொப்டோல் தொலைக்காட்சி விவாதம்

வாஷிங்டன், செப். 24

இந்த வருட இறுதியில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் மோதும் தற்போதைய ஜனாதிபதி பில் கிளின்ரனும் குடியரசுக்கட்சி வேட்பாளர் பொப் டோலும் அதற்கு முன்னர் விரைவில் நேரடியாகத் தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் பேசவிருக்கின்றனர்.

வாஷிங்டனில் டோலின் பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

மூன்றாவது வேட்பாளரான கெற்ஜோ அந்த விவாதத்தில் கலத்து கொள்ள அழைக்கப்படவில்லை என்றும் அப்பேச்சாளர் குறிப்பிட்டார்.

இத்தேர்தல் தொடர்பான கருத்துக் கணிப்பில் ஜனாதிபதி கிளின்ரன் தொடர்ந்து முன்னணி வகித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## உலக அரங்கில்

# யெல்ட்ஸினுக்கு ஆபத்தான இருதய அறுவைச் சிகிச்சை

ரஷ்ய அதிபர் யெல்ட்ஸின் இருதய அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்படவிருக்கிறார் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அவருக்கு மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள இருதய அறுவைச்சிகிச்சை ஆபத்து மிக்கதாக இருக்கலாம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்,

ஆனால் இதுபற்றி எதிர்வரும் புதன்கிழமை அல்லது வியாழக்கிழமை இறுதி முடிவெடுக்கப்படும் என்றும் அந்த மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அவர் மீது நடத்தப்பட்ட மருத்துவ சோதனைகள் கடந்த அதிபர் தேர்தலுக்கு முன்பாக அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டிருக்கலாம் என்பதைக் காட்டுகின்றன என்றும் அவர்கள் தெரிவித்தனர். (உ-3)

## ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து

# வெளி நாட்டவர்கள் வெளியேறுகின்றனர்

ஐக்கிய அரசு எமிரேட்ஸிலிருந்து ஆயிரக்கணக்கான தெற்காசிய நாட்டுத் தொழிலாளர்கள் தங்கள் நாடுகளுக்குத் திருப்பிக் கொண்டிருக்கின்றனர்.

உரிய ஆவணங்களின்றி வேலை செய்யும் அந்நிய நாட்டுத் தொழிலாளர்கள் நாட்டை விட்டு இம்மாத இறுதிக்குள் வெளியேற வேண்டுமென ஐக்கிய அரசு எமிரேட்ஸ் அரசு உத்தரவிட்டுள்ளதே இதற்குக் காரணம்.

பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த சுமார் ஒரு இலட்சம் தொழிலாளர்கள் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் பணி புரிந்து வருவதாகவும் —

அவர்களை அழைத்து வர பங்களாதேஷ் அரசு 34 விமானங்களை ஒதுக்கியுள்ளதாகவும் பிறிதொரு செய்தி தெரிவிக்கிறது. (இ10)

## காவிரிநீர் பங்கீடு பேச்சில் கருணாநிதி திருப்தி

காவிரி நதி நீர் பங்கீட்டுப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் தனக்கும், கர்நாடக முதலமைச்சர் ஜே. எஸ். பட்டேலுக்கும் இடையே நடந்து வரும் பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாக உள்ளன என் தமிழக முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

டில்லியில் கர்நாடக முதலமைச்சருடன் கருணாநிதி காவிரி நதி நீர்ப்பங்கீடு குறித்து மூன்றாவது சுற்றுப் பேச்சுக்களை நடத்தினார்.

பேச்சுவார்த்தை காவிரி நடுவர் மன்ற வரம்புகளுக்கு உட்பட்டதாக இருந்தது என்றும் — இரு மாநிலங்களின் விவசாயிகளின் நலன்கள் பாதிக்கப்படாத விதத்தில் காவிரி நீர் பங்கீட்டுப் பிரச்சினையில் நிரந்தர தீர்வு காண இருமாநில அரசுகளும் மிகுந்த ஆர்வங்கொண்டிருப்பதாகவும் — அவர் தெரிவித்தார்.

அடுத்த சுற்றுப்பேச்சு அடுத்த மாதம் முதல் அல்லது இரண்டாம் வாரத்தில் நடைபெறலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## அருணாசல் காங்: அரசில் சேரும்

இந்திய மாநிலங்களில் ஒன்றான அருணாசலப் பிரதேஷில் அண்மையில் தொடக்கப்பட்டுள்ள அருணாசலக் காங்கிரஸ் மத்தியில் ஐக்கிய முன்னனி அரசோடு சேர்ந்து கொள்ளும். (இ-10)

# சுய தொழிலில் ஈடுபட்டுள்ளோர் ஓய்வூதியம் பெறுவதற்கு நடவடிக்கை

கொழும்பு, செப். 24

குறைந்த வருமானம் பெறும் சுயதொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோருக்கு ஓய்வூதிய முறை ஒன்றை ஏற்படுத்துவதற்கு சமூக சேவைகள் அமைச்சு நடவடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளது.

வருடாந்தம் 36 ஆயிரம் ரூபாவுக்கு குறைந்த வருமானம் பெறும்— வேறு ஊதியம் அல்லது ஓய்வூதியம் கிடைக்காத— 18க்கும் 59 வயதுக்கும் இடைப்பட்ட சுயதொழிலில் ஈடுபட்டுள்ளோர் இந்த ஓய்வூதியம் பெற தகுதியுடையவர்களாவர்.

சமூக காப்பு உபகாரமாக இந்த ஓய்வூதிய முறையை ஆரம்பிப்பதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது. (இ-3)

## நிலையான தீர்வு காணுமாறு

# சு.க.,ஐ.தே.க. இரண்டையும் வலியுறுத்த வேண்டும்

## பிரதி அமைச்சர் கூறுகின்றார்

கட்சிக் கொள்கைகளை ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு இனப்பிரச்சினையை ஒரு தேசியப் பிரச்சினையாகக் கருதி, அதற்கு நிலையான தீர்வினைக் காணுமாறு ஐ. தே. கட்சிக்கும், ஸ்ரீ. ல சு. கட்சிக்கும் பொதுமக்களுக்கும் பொது அமைப்புக்களும் அழுத்தம் கொடுக்கவேண்டும்.

பிரதி உள்நாட்டலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு கோரியிருக்கின்றார்.

''தொழிற்சங்கங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், மகாசங்கத்தினர், ஏனைய மதங்களின் தலைவர்கள், கலைஞர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து இப்பிரச்சினைக்கு ஒத்த கருத்தை எட்டும் விதத்தில் இவ்விரு கட்சிகளுக்கும் அழுத்தம் கொடுக்கவேண்டும். இது ஒரு தேசியப் பிரச்சினையானதால் இதற்கான தீர்வை காணும் பொறுப்பை தனியே அரசியல்வாதிகளிடம் மட்டும் ஒப்படைக்கக்கூடாது.

'எதிர்காலச் சந்ததியினர் நலனைக் கருத்திற் கொண்டு இவ்விரு கட்சிகளும் மனச்சாட்சியுடன் நடந்துகொள்ள வேண்டும். நாட்டின் தேசிய வருமானத்தின் மூன்றில் ஒரு பங்கு யுத்தத்திற்குச் செலவிடப்படுவதால் இதை நாடு தொடர்ந்து தாங்காது — என்று அவர் மேலும் கூறினார்.

## வீடமைக்க நிதி

வடமராட்சி செப். 24

வடமராட்சி தென் மேற்கு கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உள்ள 111 குடும்பங்களுக்கு செவன திட்டத்தில் இருந்து வீடமைக்க நிதி வழங்கப்படவுள்ளது. (இ-173)

## சிறில் கார்டினர் காலமானார்

கொழும்பு, செப். 24

இலங்கையின் முன்னணி தொழிலதிபர்களில் ஒருவரான சிறில் கார்டினர் கடந்த செவ்வாய்க்கிழமை காலமானார்.

கொழும்பு காலிமுக ஹோட்டல் சிலோன் தியேட்டர்ஸ் மற்றும் பல நிறுவனங்களின் ஸ்தாபகராக அவர் விளங்கினார். (இ-3)

## அதிபர்கள் ஓய்வூதியம்

கொழும்பு, செப். 24

1995 ஜனவரி மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் ஓய்வுபெற்ற இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த அதிபர்களுக்கு 1996 மார்ச் 28 ஆம் திகதிய சுற்றறிக்கை 10/96 இன் சம்பள உயர்வுக்கு ஏற்ப ஓய்வூதியம் கிடைக்கவிருக்கிறது.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை கல்வி, உயர் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்வாகம்) திரு. உபசேன சேனநாயக்க சகல மாகாண பிரதம செயலாளர்களுக்கும் அனுப்பியுள்ளார்.

இந்த சுற்றறிக்கையின்படி அதிபர் சேவையில் முதலாம், இரண்டாம் தர அதிபர்களுக்கு புதிதாக அமுல் செய்யப்பட்ட சம்பள உயர்வுக்கு ஏற்ப, ஓய்வூதியம் கணக்கிடப்படவிருக்கிறது.

இதேவேளை — இந்த சுற்றறிக்கையின்படி 3ஆம் தர அதிபர்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை என்று அவர்கள் முறைப்பாடு கூறுகின்றனர். (இ-3)

## வினாத்தாளில் தவறு:

# பாதிக்கப்பட்ட அதிபர்கள் விசேட புள்ளி பெறுவர்

கொழும்பு செப். 24

கடந்த மாதம் கொழும்பில் நடைபெற்ற 1 ஏ.பி அதிபர்களின் இறுதிப்பரீட்சையில் தமிழ் மொழி வினாத்தாளில் மொழி பெயர்ப்புக் காரணமாக இடம்பெற்ற தவறினால் பாதிக்கப்பட்ட அதிபர்களுக்கு விசேட புள்ளிகள் வழங்கப்படவிருக்கின்றன.

ஸ்தாபன விடய, நிதிமுகாமைத்துவ, கல்வி சட்டம் சம்பந்தமான வினாத்தாளின் 2ஆவது வினாவில் ''10ஆவது வருடம்'' என்ற சொல் விடப்பட்டிருந்தமையால் தமிழ் மொழியில் பரீட்சை எழுதிய அதிபர்கள் வினாவை விளங்கிக் கொள்ள முடியாமல் மிகவும் சிரமப்பட்டனர். சிங்கள மொழி வினாத்தாளில் இச்சொல் சரியாக இருந்தது.

இந்த விடயம் இந்த பயிற்சிச் செயல் திட்டத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகம் எச். எம். சிறிசேனாவிடம் சுட்டிக் காட்டப்பட்டது.

இப்பரீட்சார்த்திகளுக்கு அநீதி இழைக்கப்படாத வகையில் புள்ளி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தேவை

கணணியும் அதன் உபகரணங்களும், போட்டோசெற் பிரதி இயந்திரமும் கொடித் தம்பமும், முப்பது அடி நீள பலாமரமும் வைத்திருப்பவர்கள் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். க. க. இராசா, இல. 60 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (42825)

## பொது அறிவு

போட்டிப் பரீட்சைகளுக்குத் தேவையான அண்மைக்கால தகவல்களை உள்ளடக்கிய வே. தபேந்திரனின் ''பொது அறிவு நூல்'' எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் விற்பனையாகிறது.
(42779)

## நாளும் யோகம் பயில்

சுவாமி சிதானந்தர் 80வது ஜெயந்தி தினம் இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகின்றது. மில்க்வைற் மேலுறைகளுக்குயோகாசனப் படம் வழங்கப்படுகின்றது. மில்க்வைற். (சி/3170)

## மணமகள் தேவை

இங்கிலாந்தில் தொழில் புரியும் 28 வயதுடைய யாழ். இந்து உயர்குல மணமகனுக்கு அழகுள்ள படித்த மணமகளை பெற்றோர் விரும்புகின்றனர். இங்கிலாந்தில்வசிக்கும் மணமகளானாலும் விரும்பத்தக்கது. நட்சத்திரம் விசாகம், 7 ஆம் இடத்தில் செவ்வாய்க் குற்றம் உடைவர் ஆவார். தொடர்பு எஸ். கே கந்தசாமி '' மதிவாசம் '' மீசாலை மேற்கு, மீசாலை.
(42836)

## கூட்டுறவு உணவகம்

வலிகாமம் தெற்கு, செப். 24

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் பாவனையாளர்களின் நன்மைகருதி சங்கானை மரக்கறிச் சந்தையில் கூட்டுறவு உணவகம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.
(இ-152)

## துன்னாலையில் தாக்குதல்

கொழும்பு, செப். 24

துன்னாலையில் ஊடுருவ முயன்ற புலிகள் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவர் பலியானதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

அம்பாறை புல்லாவெளியில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் கான்ஸ்டபிள் ஒருவர் காயமுற்றார்; பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டார்.
(உ-3)

## பரீட்சையை இங்கு நடத்த முயற்சி

யாழ்ப்பாணம், செப். 24

தபால் திணைக்களத்தில் பணிபுரியும் சிறுபணியாளர்களையும், உப - அஞ்சல் அதிபர்களையும் அஞ்சல் அதிபர் சேவையில் சேர்த்துக் கொள்ளும் வரையறுக்கப்பட்ட போட்டிப்பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் ஐந்தாம் திகதி இப்பரீட்சை கொழும்பில் நடக்கவுள்ளது.

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த பரீட்சார்த்திகள் கொழும்பிற்கு இந்தப் பரீட்சைக்குச் செல்வதில போக்கு வரத்துக் கஷ்டங்கள் உள்ளதாகவும் —

இதன் காரணமாக இப்பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு செய்யுமாறும்—யாழ். பிரதமதபாலதிபர் திரு. சு. கோடீஸ்வரன் யாழ் சிவில் விவகார அதிகாரியைக் கேட்டுள்ளார்.
(அ-3)

# கண்ணீர் அஞ்சலி

புதிய உயர் கல்லூரி இந்துநாகரிக விரிவுரையாளரும்,
எனது ஆசிரியருமாகிய
திருமதி S. அருள்நங்கை அவர்களின்
தந்தையார்

அமரர்

**த. இராசரத்தினம் அவர்கள்**

இறைபதம் அடைந்ததையொட்டி துயருறும் குடும்பத்தவர்களுக்கு, எனது கண்ணீர் அஞ்சலியையும், ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

ஆசிரிய மாணவன்:
சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜக் குருக்கள்.

(42832)

# 6-ம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி கெங்காதேவி நடேசன்**
(இங்கை வங்கி - காங்கேசன்துறை)

தோற்றம்: 26 — 02 — 1952
மறைவு: 01 — 10 — 1990

அன்புத் தாயே!
நீ இன்று இல்லை.
ஆனால் - உன் நினைவுகள்
நித்தமும் எம்முடனே.......
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புக் கணவர்,
பிள்ளைகள்: உதயசேகர்,
உதயகுமார்(யாழ் இந்துக் கல்லூரி)
தாய், சகோதரர், சகோதரிகள்.

(42827)

# 3-ம் மாத நினைவஞ்சலி

அமரர்

**கணபதிப்பிள்ளை சிவபாதசுந்தரம்**
(B. Sc.)

இளைப்பாறிய அதிபர்
யா/டிறிபேக 'கல்லூரி,
சாவகச்சேரி.

**24-06-1996** அன்று இறைபதமெய்திய அதிபர் அவர்களின் சேவையை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகின்றோம்.

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்,
மாணவர்கள், பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சபை.

யா/டிறிபேக் கல்லூரி,
சாவகச்சேரி.

[சி/3166]

# 9 ஆம் ஆண்டு நினைவில்



**அமரர் இ. நாராயணபிள்ளை**

மாநிலத்தை விட்டகன்ற
ஆண்டுத்திதி இன்று — 24 - 09 - 96.

பாசமிகு
குடும்பத்தினர்

உசன்,
மிருசுவில்.

(42797)

# கொழும்பில் குழப்பத்தை ஏற்படுத்த புலிகள் முயற்சி!

## எச்சரிக்கின்றார் டி. ஐ. ஜி.

கொழும்பு, செப். 24

கொழும்பு மாநகரில் குழப்பத்தையும், அழிவையும் ஏற்படுத்த விடுதலைப் புலிகள் இயக்கம் பல்வேறு வழிகளைக் கையாளக் கூடும் என்பதால் பொதுமக்கள் எந்நேரமும் விழிப்பாக இருக்க வேண்டும் என்று கொழும்பு பிரதேச பிரதிப் பொலீஸ் அதிபர் டி. எம். டி. சிறு திஸநாயக்க கேட்டுள்ளார்.

இவ்வாறு இலங்கை வானொலி அறிவித்தது.

நாசகார வேலைகளை தடுப்பதற்காக பொலீஸாரும், இராணுவத்தினரும் மேற்கொள்ளும் சோதனை, மற்றும் காவல் நடவடிக்கைகள் பெரும் பயனை அளித்துள்ளன.

இருந்த போதிலும் எந்நேரமும் குழப்பத்தை விளைவிக்க புலிகள் பல்வேறு தந்திரோபாயங்களைக் கையாளக் கூடும் என்றும் பிரதி பொலீஸ் மா அதிபர் தெரிவித்திருக்கின்றார்.
(உ-3)

கட்டைவேலி — நெல்லியடி

**ப. நோ. கூ சங்கம் (வ/து)**

# பதவிகள் வெற்றிடம்

கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பொது முகாமையாளர் — 165/88 - 08

சம்பளத் திட்டம் -

**1, 305 - 60 x 4 - 75 x 11 — 2, 370**

இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் வழங்கப்படும்.

தகைமைகள்:

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 09 வது சம்பளத் திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பளத் திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 06 வருட அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில் நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர். தராதரப் பத்திரம் (உயர்தரம்) க. பொ. த. (உயர்தரம்) இல் 03 பாடத்திலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

2. கணக்காளர் — 165/88 - 09

சம்பளத் திட்டம்:

**1, 105 - 60 x 4 - 75 x 11 — 2, 170**

இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்.

தகைமைகள்:

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 10வது சம்பளத் திட்டத்தில் கணக்காளர்/ கணக்காய்வாளர் பதவியில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுப் பணியாளர் 11வது சம்பளத் திட்டத்திலான கணக்காளர்/ கணக்குப் பதிவாளர்/ கணக்கு அல்லது கணக்காய்வு லிகிதர் பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) ஐக்கிய இராச்சிய கணக்கு பதிவாளர் கல்வி நிலையத்தின் இறுதிப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனத்தில் கணக்காய்வாளர்/ கணக்காளர்/ மேற்பார்வையாளர் மட்டப் பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) அல்லது க. பொ. த. (உயர்தரம்) கணக்கியல் உட்பட 03 பாடங்களுடன் கணக்காளர்/ கணக்காய்வாளர்/ மேற்பார்வை மட்டப் பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

வயதெல்லை:

**20 — 50** வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். சங்கப் பணியாளருக்கு வயதெல்லையில் விலக்களிக்கப்படும்.

விண்ணப்பங்களுடன் தகைமைச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் **7-10-96** ஆம் திகதிக்கு முன்பாக ''தலைவர், கட்டைவேலி — நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி'' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
கட்டைவேலி - நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்.

கரவெட்டி,
21-9-96.

[சி-3168]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## புட்டுக் காட்டும் புள்ளி விவரம்

அரசாங்கம் பதவிகளுக்கு நியமனம் வழங்குவதில் இனங்களுக்கிடையே பாகுபாடு காட்டப்படுகிறது. சிறுபான்மை இன மக்களான தமிழர்கள், முஸ்லிம்களின் அரச வேலை வாய்ப்பு வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாகுபாடு நீக்கப்பட வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி நீலன் திருச்செல்வம் இந்த அநீதியைப் புள்ளி விவரங்களுடன் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார்.

1956 ஆம் ஆண்டில் தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டதோடு —

அரசாங்க சேவையில் இருந்த தமிழர்கள் மிகப் பெரும் எண்ணிக்கையில் தமது பதவிகளில் இருந்து உரிய வயது வருவதற்கு முன்னரே விலகியது மட்டுமன்றி—

அரச சேவையில் புதிதாகச் சேரும் தமிழர்களின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைக்கப்பட்டது.

1985 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது பத்து வருடங்களில் — 1995 இல்— முழுச் சனத்தொகையிலும் 12.67 சதவீதமாக உள்ள தமிழர்களுக்கு 5.5 வீத அரச வேலை வாய்ப்பே வழங்கப்பட்டுள்ளதாக கலாநிதி நீலன் திருச்செல்வம் புட்டுக்காட்டியிருக்கிறார்!

இதே போன்று மொத்தச் சனத்தொகையில் 7 சதவீதமாக உள்ள முஸ்லிம்களுக்கு அரச துறைகளில் 2.4 சதவீத வேலை வாய்ப்பே கிடைத்திருக்கிறது.

ஆனால் 73.98 சத வீதமான சிங்களவர்களுக்கு 85.6 சதவீத அரச வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

இதற்கு இடப்பட்ட பெயர் தான் இனவிகிதாசார வேலை வாய்ப்பு!

திறமை அடிப்படையில் அரச வேலைகளுக்கு ஆட்களைத் தெரிவு செய்தால் தமிழர்கள் அதிக எண்ணிக்கையில் சேர்ந்து விடுவார்கள் என்பதால்—

வேலை வாய்ப்பில் இன விகிதாசாரம் புகுத்தப்பட்டது. அதன் மூலம் எல்லோருக்கும் நீதி வழங்கப்படும் சமத்துவம் அல்லது சமவாய்ப்பு வழங்கப்படும் என்று பெரிதாகப் பீற்றப்பட்டது.

ஆனால் வேலை வாய்ப்பில் தமிழர்களுக்கு எவ்வாறு பாகுபாடு காட்டப்பட்டது என்பது இப்போது புலனாகின்றது அல்லவா?

கொழும்பில் அதிகாரம் குவிந்திருக்கும் வரை இந்தப் பாகுபாடு ஒருபோதும் நீங்க மாட்டாது. தமிழர்களுக்கென சுயாட்சி முறை உருவாகாத வரை, அவர்கள் தங்கள் பகுதியில் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வரை—

தமிழர்கள் அரச வேலை வாய்ப்பில் மட்டுமன்றி கல்வி, உற்பத்தி மற்றும் சகல துறைகளிலும் இவ்வாறே பாகுபாட்டுக்கு ஆளாக்கப்பட்டுப் புறக்கணிக்கப்படுவர்.

சமநீதி, சமவாய்ப்பு என்பனவெல்லாம் வெறும் காகித விதிகளாகவும், சட்டங்களாகவும் மேனி மினுக்குக்குக் காட்டப்படுமே அன்றி கைக்கு எதும் வந்துசேராது. வெறும்வாய் வேதாந்தமாகத் தொடரும்.

தமிழர்கள் கைக்கு சுயாட்சி உரிமை வந்து சேரும் வரை அவர்கள் ஓரங்கட்டப்பட்ட இனத்தினராகவே வாழ நேரிடும்.

# நீர்மூழ்கிக் கப்பல்கள் புலிகள் அமைப்பிடம்?

கொழும்பு துறைமுகப் பகுதியில் நீர்மூழ்கிகளின் நடமாட்டம் அடிக்கடி இருப்பதாகக் கொழும்பில் செய்திகள் அடிபடுகின்றன. புலிகளின் நீர்மூழ்கிகளே அவை என்றும் சிலர் கூறுகின்றனர்.

இது குறித்து 'தினமுரசு' கட்டுரையாளர் ''நாரதர்'' தனது ''எக்ஸ்ரே ரிப்போர்ட்டில்'' தெரிவித்த தகவல்கள் வருமாறு :-

கொழும்புத் துறைமுகப் பகுதியில் நீர்மூழ்கி நடமாட்டம். அடிக்கடி மூக்கைக் காட்டி விட்டு மறைந்து கொண்டிருக்கிறது.

கடந்த வருடமும் இப்படியொரு செய்தி பரபரப்பாக அடிபட்டது. உடனே புலிகளின் நீர்மூழ்கிகள் தான் அவை என்று சில பத்திரிகைகளிலும் செய்தி வந்தது.

இப்போது மீண்டும் நீர்மூழ்கிச் செய்திகள் அடிபடத் தொடங்கியுள்ளன.

நீர்மூழ்கிகளோடு புலிகளையும் இணைத்து வெளியாகும் செய்திகளில் உண்மை இருக்கிறதா என்று ஆராய்வோம்.

புலிகளிடம் நீர்மூழ்கிகள் இருந்தால் கொழும்புத் துறைமுகப்பகுதியில் வந்து மூக்கைக் காட்டிக்கொண்டு திரியவேண்டிய அவசியம் என்ன?

'எங்களிடம் நீர்மூழ்கிகள் இருக்கின்றன. எனவே உஷாராக இருங்கள்' என்று இரகசியத்தை வெளியிடுமளவுக்கும், கடற்படையினரை உஷார்ப்படுத்து மளவுக்கும் புலிகள் நடந்துகொள்வார்கள் என்று யாராவது நம்பலாமா?

கடற்படையினரை உஷார்ப் படுத்தாமல் உடனே ஒரு பாரிய தாக்குதலையே புலிகள் நடத்தி முடித்திருப்பார்கள்.

கொழும்புத் துறைமுகப் பகுதியில் ஏற்கனவே புலிகள் ஒரு தாக்குதலை நடத்தினார்கள். புலிகளிடம் சிறியரக நீர்மூழ்கிகள் இருந்திருந்தால் கூட குறிப்பிட்ட தாக்குதலின் முடிவே வேறு விதமாக அமைந்திருக்கும்.

அதுதவிர முல்லைக் கடலில் புலிகளின் ஆயுதக் கப்பல் தாக்கப்பட்டதும் தவிர்க்கப் பட்டிருக்கலாம். நீர்மூழ்கிகள் இருக்கும்போது கப்பலில் ஆயுதம் கொண்டுவந்து பல கோடி ரூபாய் பெறுமதியான ஆயுதங்களைப் புலிகள் ஏன் இழக்க வேண்டும்?

### நீர்மூழ்கிகள் இரண்டு வகை

நீர்மூழ்கிகளை இரண்டு வகையாகப் பிரித்துப் பார்க்கலாம்.

ஒன்று, ஆயுதங்களையும் ஆட்களையும் தாங்கிச் செல்லும் நீர்மூழ்கிக்கப்பல்கள். இவற்றில் பல ரகங்கள் இருக்கின்றன. ஏவுகணைகளை டசின் கணக்காக அடுக்கிச் செல்லும் நவீன நீர்மூழ்கிக் கப்பல்களும் இருக்கின்றன.

எவ்வாறான ரக நீர்மூழ்கிக் கப்பலை புலிகள் வைத்திருப்பதாக இருந்தாலும் அதற்கு ஒரு பெரிய நாட்டின் உதவி நிச்சயம் தேவை.

இலங்கை அரசிடம் கூட நீர்மூழ்கிக் கப்பல் கிடையாது. வாங்கினால் கட்டுப்படியாகாது, இந்தியாவிடம் கூட நீர்மூழ்கிக் கப்பல்கள் பெருமளவில் இல்லை. அமெரிக்கா போன்ற பணக்கார நாடுகளில் தேவைக்கு அதிகமாகவே நீர்மூழ்கிக் கப்பல்கள் இருக்கின்றன.

எனவே புலிகளிடம் நீர்மூழ்கிக் கப்பல் இருப்பதாகக் கூறப்படுவது சிறுபிள்ளைத் தனமான ஒரு வதந்தி மட்டுமே.

ஆனால் புலிகளுக்கு வேறு ஏதாவது ஒரு நாடு ஆயுத உதவி செய்வதானால் நீர்மூழ்கிக் கப்பல்மூலம் ஆயுதங்களை அனுப்பக்கூடும். அதற்கான வாய்ப்பு உண்டுதானே என்பது மற்றொரு சந்தேகம்.

அப்படியொரு உதவி வழங்கப்படுவதாக இருந்தால் குறிப்பிட்ட நீர்மூழ்கிக் கப்பல் எந்தளவுக்கு இரகசியமாக வந்து செல்லமுடியுமோ அந்தளவுக்கு இரகசியமாக வந்து செல்லுமே தவிர, கொழும்புக் கடலில் வந்து தேவையில்லாமல் மூக்கைக் காட்டிக்கொண்டிருக்காது.

அது தவிர நீர்மூழ்கிக் கப்பல் மூலம் ஆயுதங்கள் வருமளவுக்கு புலிகளுக்குப் பெரிய கை ஒன்று உதவுமானால், இன்றைய போர்க்கள நிலவரமே தலைகீழாக மாறியிருக்கும்.

நீர்மூழ்கியில் இரண்டாவது வகை, சிறிய ரக நீர்மூழ்கிகள். 'அண்டர் வோட்டர் குருசர்' என்றும் இவை அழைக்கப் படும்.

நீருக்கடியில் ஒரு சிலர் மட்டும் நீச்சல் அடித்துச் செல்ல இவை பயன்படும்.

அவ்வாறான குட்டிக் குட்டி நீர்மூழ்கிகளைக் கூட புலிகள் இதுவரை பயன்படுத்தவில்லை. அவ்வாறான குட்டி நீர்மூழ்கிகள் இருக்குமானால் அவற்றை மிக இரகசியமாக வைத்திருந்து நீருக்கடியில் பெரும் தாக்குதல் ஒன்றைப் புலிகள் நடத்தியிருப்பார். கடற்படையினருக்கு வேடிக்கை காட்டிவிட்டு, எட்டி எட்டிப் பார்த்துவிட்டுப் போகமாட்டார்கள்.

'அண்டர்வோட்டர் குருசர்' புலிகளிடம் இருக்கிறது என்ற சந்தேகம் உறுதியாகி விட்டால் கடற்படையினர் என்ன செய்வார்கள்? உடனே மாற்று ஏற்பாடு தேடுவார்கள். அண்டர் வோட்டர் குருசரைக் கடலுக்கடியில் வைத்துத் தாக்கக் கூடிய கருவிகள் இருக்கின்றன. அவற்றை வாங்கிக் கொள்வார்கள்.

எனவே, கடற்படையினர் மாற்று ஏற்பாடு செய்து உஷாராக புலிகள் வாய்ப்புக் கொடுப்பார்களா? கொடுக்க மாட்டார்கள். தம்மிடம் 'அண்டர் வோட்டர் குருசர்' இருந்தால் உடனடியாக அதனைப் பாவித்துக் கடலில் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தி முடித்திருப்பார்கள்.

அதைவிடுத்து தம்மிடம் 'அண்டர் வோட்டர் குருசர்' இருப்பதாகக் காட்டிக் கொண்டு திரியமாட்டார்கள்.

தாம் வீழ்த்திய விமானங்களை எந்தவகை ஆயுதத்தால் சுட்டுவீழ்த்தினோம் என்பதையே புலிகள் இதுவரை கூறவில்லை காரணம், அதற்கு மாற்றீடான விமானங்களை படையினர் வாங்கி விடுவார்கள் என்ற எச்சரிக்கை உணர்வுதான்.

எனவே - தம்மிடம் நீருக்கடியில் பயன்படுத்தக் கூடிய சிறியரக நீர்மூழ்கிகள் இருக்குமானால் அவை தம்மிடம் இருப்பதற்கான சுவடே தெரியாமல் ஒரு பெரும் தாக்குதலை நடத்தி முடிப்பதில் தான் புலிகள் அக்கறை காட்டியிருப்பர்.

எனவே - நீர்மூழ்கிகள், சிறியரக நீர்மூழ்கிகள் போன்றவற்றைப் புலிகளோடு முடிச்சுப்போட்டுப் பரப்பப்படும் செய்திகளை ஒதுக்கிவிடலாம்

கடந்த வருடம் 'ஐரிஸ் மோனா' கப்பலைக் கடத்திச் சென்ற புலிகள், அதனை வைத்து வலைவிரித்துஇரண்டு டோராப் படகுகளைத் தாக்கினார்கள். [illegible] டோராப் படகுகளை புலிகள்

சிறியரக நீர்மூழ்கிகள் மூலம் தாக்கியதாகச் செய்திகள், விமர்சனங்கள் வெளியிட்டன. ஆனால் தினமுரசு எக்ஸ்ரே ரிப்போட்டில் அந்த வதந்திகளை மறுத்திருந்தது.

அதன் பின்னர் புலிகள் கடலில் பல வெற்றிகரமான தாக்குதல்களை நடத்தியுள்ளனர். அவற்றிலும் சிறிய ரக நீர்மூழ்கிகள் பயன்படுத்தப் படவில்லை, கொழும்புத் துறைமுகத் தாக்குதலில்கூட நீருக்கடியில் நீந்திவந்துதான் குண்டு வைக்க முயன்றனர். எனவே தினமுரசு வெளியிட்ட தகவல் உறுதிப்படுத்தப்பட்டது.

### நெருப்பில்லாமல் புகை வராது

இப்போது சரியாக ஒரு வருடம் கழிந்த பின்னர் கொழும்புப் பத்திரிகைகள் சிலவற்றில் 'புலிகளின் நீர்மூழ்கிக் கப்பல்' என்ற பரபரப்புச் செய்திகள் மீண்டும் வெளியாகியுள்ளன.

இச்செய்திகள் தாமாக உருவானவையல்ல. நெருப்பில்லாமல் புகையுமா? ஆனால் நெருப்பு எங்கே இருக்கிறது என்று கண்டறியாமல் சில பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுவிட்டன.

தமது பலத்தைப் பெருக்குவற்கு நவீன ரக ஆயுதங்களையும் மேலும் நவீன போர்ப் படகுகளையும் பெறுவதற்கு கடற்படையினர் விரும்புவது இயல்புதான்.

அவ்வாறான விருப்பத்தை விரைவாக செயற்படுத்த நீர்மூழ்கிப் பூச்சாண்டி காட்டப் பட்டிருக்கலாம்.

அதுதவிர கடற்பகுதியில் புலிகளின் கடற்கரும்புலிகளது தாக்குதல்கள் காரணமாக கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ளன.

கடலில் ரோந்துக்குச்செல்ல ஏற்படும் தயக்கங்களையும் நீர்மூழ்கிப் பூச்சாண்டியால் நியாயப்படுத்தலாம்.

எவ்வகையில் பார்த்தாலும் கொழும்பு மற்றும் இலங்கைக் கடற்பகுதியில் நீர்மூழ்கிகள் நடமாட்டம் என்ற செய்தி புலிகளுக்குச் சாதகமான விடயமல்ல. இலங்கை அரசின் கடற்படையினருக்கு சாதகமான விடயம்தான்.

அதுமட்டுமல்லாமல், மீன்பிடிக்கான தடைகளையும் 'நீர்மூழ்கி' வதந்தி நியாயப் படுத்தப்பார்க்கிறது. ★

## சமய நிகழ்வுகளில்

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்தத் தேர்த் திருவிழா நாளை புதன் கிழமை மு. ப. 9 மணிக்கு நடைபெறும்.

வியாழனன்று பி. ப. 3 மணிக்கு கடல் தீர்த்தமும், வெள்ளிக்கிழமை மு. ப. 9 மணிக்கு கேணித் தீர்த்தமும் இடம்பெறும்.

இன்று சப்பறத் திருவிழா வாகும். (அ-173-111-30)

★ ★ ★

ஏழாலை மேற்கு, சிவபூதராயர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இம்மாதம் 16 ஆம் திகதி ஆரம்பமானது. நாளை புதன்கிழமை பத்தாம் திருவிழாவுடன் அலங்கார உற்சவம் நிறைவு பெறும். (அ)

★ ★ ★

சாவகச்சேரி, செருக்கல் சித்திவிநாயகர் ஆலய வருடாந்தத் தேர்த் திருவிழா நாளை புதன்கிழமை மு. ப. 9.30 மணிக்கு நடைபெறும்.

தீர்த்தத் திருவிழா வியாழக்கிழமை மு. ப. 10 மணிக்கு இடம்பெறும். செருக்கல் சித்தி விநாயகருக்கு இவ்வருடம் நிகழ்வது ஐம்பதாவது மகோற்சவமாகும். (அ-30)

## தென்மராட்சி ஒய்வூதிய வவுச்சர்கள்

தென்மராட்சி, செப் 24

தென்மராட்சி பிரதேச ஒய்வூதியர்களின் செப்ரெம்பர் மாத வவுச்சர்கள் இன்று செவ்வாய்க்கிழமை தபாலில் சேர்க்கப்படவுள்ளன.

சாவகச்சேரி, கொடிகாமம் கைதடி ஆகிய கிராமிய வங்கிகளில் ஒய்வூதியம் பெறுபவர்களின் வவுச்சர்கள் கிராமிய வங்கிகளுக்கும், ஏனைய வங்கிகளில் ஒய்வூதியம் பெறுபவர்களின் வவுச்சர்கள் தபாலிலும் சேர்க்கப்படுமென பிரதேச செயலர் பு. சுந்தரம் பிள்ளை அறிவித்துள்ளார்.

இவ் வவுச்சர்களுடன் ஒய்வூதியர்களின் விவரங்கள் சேகரிக்கும் படிவங்கள் இணைக்கப்பட்டுள்ளதாகவும் இப்படிவங்களைப் பூர்த்தி செய்து பிரதேச செயலகக் கணக்காளரிடம் ஒப்படைக்குமாறும், அந்தந்த ஒய்வூதியர்கள் தமது ஒய்வூதிய அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டையுடன் நேரில் வருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-117)

# வடக்கு-கிழக்கு ஆளுநர் எஸ்.டி. பண்டாரநாயக்க?

கொழும்பு, செப். 24

வடக்கு -கிழக்கு ஆளுநராக பழம்பெரும் அரசியல்வாதி எஸ். டி. பண்டாரநாயக்கா பெரும்பாலும் நியமிக்கப்படலாம் என அரசியல் வட்டாரங்களை ஆதாரங்காட்டி கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது ஆளுநராகப் பதவி வகிக்கும் காமினி பொன்சேகா வெளிநாட்டுத் தூதுவராக நியமிக்கப் படலாம் என்றும் தெரிகின்றது.

எவ்வாறாயினும் எஸ்.டி. பண்டாரநாயக்காவின் இந்த நியமனம் காமினி பொன்சேகாவின் உடன்பாட்டுடனேயே மேற்கொள்ளப்படவுள்ளதாகக் கூறப்பட்டது. (உ-10)

## அன்னதானம்

வடமராட்சி, செப். 24

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மகோற்சவத்தையொட்டி, தென் புலோலி மூச்சம்பலம் பொன்னையசாமியார் மடத்தில் நாள் தோறும் அன்னதானம் வழங்கப்பட்டுவருகிறது. வல்லிபுர ஆழ்வார் அன்னதான சபையினர் இதனைச் செய்து வருகிறார்கள்.

(அ-173)

## வைரஸ் காய்ச்சல்

யாழ். குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கால நிலை மாற்றத்தால் பெரும் பாலானோருக்கு வைரஸ் காய்ச்சல் பீடித்து வருகின்றது.

தடிமனுடன் ஏற்படும் இக் காய்ச்சலினால் பீடிக்கப் பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் நாளாந்தம் பெரும் எண்ணிக்கையிலான நோயாளர்கள் சிகிச்சை பெறுகின்றனர். (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாந்திபேதி, வயிற்றோட்டம் மற்றும்

# தொற்று நோய்கள் பெரியளவில் வன்னியில் பரவும் ஆபத்து நிலை!

## குளோரின் கொண்டுவர அனுமதி இல்லை

கொழும்பு செப். 24

வன்னிப் பகுதியில் வாந்திபேதி, வயிற்றோட்டம் போன்ற உயிராபத்தான தொற்றுநோய்கள் பெரியளவில் பரவும் ஆபத்து நிலை உருவாகியுள்ளது.

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் தண்ணீர் மற்றும் சுகாதாரப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதம அதிகாரியான ஜோன் பிளெமிங் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

வன்னிப் பகுதியில் உள்ள குழாய்க் கிணறுகளுக்குத் தேவைப்படும் உதிரிப்பாகங்களையும், தண்ணீரைச் சுத்திகரிக்கத் தேவையான குளோரினையும் அங்கு எடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு எதிர்பார்த்திருப்பதாகவும் —

அனுமதி கிடைக்கவில்லையெனில் பெரியளவில் தொற்று நோய் பரவும் ஆபத்து உண்டு என்றும் — பிளெமிங் மேலும் தெரிவித்தார்.

வன்னியில் உள்ள சுகாதார நிலைமை குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

வன்னிப் பிரதேசத்தில் நீண்ட காலமாக வரட்சி நிலவுகிறது. அங்குள்ள குழாய்க் கிணறுகளும் சேதப்படுத்தப்பட்டுவிட்டன. வன்னியில் சுகாதார வசதிகள் முற்றாக அற்றுப்போய் விட்டன. இவற்றால் அங்கு பயங்கர நிலைமை தோன்றியுள்ளது —

இப்போது வன்னிப் பகுதியில் பெய்யும் மழை நிலைமையை மேலும் மோசமாக்கும். பருவகால மழைவந்தால் தண்ணீர் தட்டுப்பாடு நீங்கிவிடும் என்று தான் பொதுவாகச் சொல்வதுண்டு. ஆனால் —

மூடப்படாத கிணறுகளில் மழைநீர் உட்செல்லும் போது மிருகங்களின் மலக்கழிவுகளும் மற்றும் கழிவுகளும் தண்ணீரை அசுத்தமாக்கி விடுகின்றன. அதனை குளோரின் கொண்டு சுத்திகரிக்க வேண்டியது மிக அவசியம் —

ஒரு கிணற்றுத் தண்ணீரில் நூற்றுக் கணக்கான குடும்பங்கள் தங்கியிருக்கும் போது வாந்திபேதி, வயிற்றோட்டம் போன்ற ஆபத்தான வியாதிகள் பரவி பெரும் அழிவைக் கொண்டு வரலாம் —

ஆனால் தண்ணீரைச் சுத்திகரிப்பதற்குத் தேவையான குளோரின் எள்ளளவும் இல்லை நோய் பரவும் ஆபத்தைத் தடுக்க அது மிக மிக அவசியம். அவசரத் தேவை அது — என்றார்.

முல்லைத்தீவுமாவட்டத்தில் கையால் இயக்கும் தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் இருபத்தைந்தினைப் புதிதாக அமைக்கவும் —

ஏற்கனவே இருந்த அத்தகைய இயந்திரங்கள் ஐம்பதைத் திருத்தவும் — செஞ்சிலுவை சர்வதேசக் குழு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஜோன் பிளெமிங் மேலும் தகவல் வெளியிட்டார்

(அ)

கிழக்கிலிருந்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடமுடியாத ஒரு தொகை ஆயுதங்கள் மற்றும் இராணுவத் தளபாடங்களை கடல் வழியாக முல்லைத்தீவுக்கரைக்குக் கொண்டு வந்து விடுதலைப் புலிகள் இறக்கியுள்ளார்கள் என்றும்- இது குறித்து புலனாய்வு அதிகாரிகள் கடந்த வாரம் தெரிவித்திருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.


ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் மகோற்சவ

அறிவித்தல்

25-09-1996 புதன்கிழமை தேர்த்திருவிழா காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும்.

26-09-1996 வியாழக்கிழமை கடல் தீர்த்தம். பிற்பகல் 2-00 மணிக்கு எம்பெருமான் கடல் நோக்கிச் சென்று மாலை 5-00 மணிக்கு ஆலயத்தை வந்து சேர்வார்.

27-09-1996 பட்டுத் தீர்த்தம் காலை 10-00 மணிக்கு ஆரம்பமாகும்.

அடியார்கள் அனைவரும் வல்லிபுர ஆழ்வாரின் அருளைப் பெற்றுய்யுமாறு கேட்கப்படுகின்றனர்.

போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

— தர்மகர்த்தாசபை

(42842)



59 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திக் கிரியை அழைப்பும்

தாயின் மடியில்: 12–04–1961

இறைவன் அடியில்: 29–07–1996

சங்கரப்பிள்ளை சர்வானந்தன்

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சங்கரப்பிள்ளை சர்வானந்தனது 59 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்தியமும்,

25-09-1996 அன்று புதன் கிழமை அவர்களது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருவதுடன் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறும் வேண்டுகின்றோம்.

சங்கரப்பிள்ளை குடும்பத்தினர்.

சூராவத்தை,
சுன்னாகம்.

(சி/3172)


மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தல்

## பாதுகாப்பு செலவு 6,000 கோடி!

கொழும்பு, செப். 24

அடுத்த ஆண்டு பாதுகாப்புச் செலவினம் 6 ஆயிரம் கோடி ரூபாவிலும் அதிகமாக இருக்கும்.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கின்றது.

யுத்தச் செலவினங்களால் மக்களின் அத்தியாவசியப் பொருள்களுக்கு வழங்கப்பட்ட மானியங்கள் குறைக்கப்பட்டுள்ளன; பாண், மா உட்படப் பல பொருள்களின் விலைகள் எக்கச்சக்கமாக அதிகரித்துள்ளன

வாழ்க்கைச் செலவு வருடாந்தம் இருபது வீதத்தால் அதிகரித்து வருகின்றது.

— இவ்வாறு அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டது.

(உ)

தெரிவுக் குழு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் உயர் மட்டக் குழுக் கூட்டத்தில் தெரிவுக் குழு அமர்வுகளிலிருந்து வெளியேறுவது மற்றும் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை ஆகிய தீர்மானங்கள் குறித்து ஆராயப்பட்டதாகவும் —

கூட்டத்துக்குச் சமுகமளித்தோரில்பெரும்பான்மையினர் இத் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நீர்கொழும்பில் கடந்த 20 ஆம் திகதி ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் நால்வர் கொல்லப்பட்டது—

கட்சி ஆதரவாளர்கள் தொடர்ந்து தாக்கப்படுவது மற்றும் படுகொலை செய்யப்படுவது —

ஐ.தே.கட்சிக்கூட்டங்களைக் குழப்புவது—

போன்ற வன்முறைகளின் மத்தியில் அரசுக்கு ஆதரவை வழங்குவதால் பலன் ஏதுமில்லை என அக் கூட்டத்தில் கலந்து கொண்ட பலர் கருத்துத் தெரிவித்துள்ளனராம்.

இதே சமயம் அரசு நாடு முழுவதும் அரசியல் வன்முறையை கட்டவிழ்த்து விட்டுள்ளது என்று ஐ.தே.க. நேற்று குற்றம் சாட்டியது.

அரசியல் வன்முறையை முற்றிலும் அகற்றுவோம் என்ற கோஷத்துடன் தான் சந்திரிகா அரசு ஆட்சியைப் பிடித்தது என்று ரணில் விக்கிரமசிங்கா பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

(உ-3-10)

## கைதடிச்சம்பவம் குறித்து ஜனாதிபதி நடவடிக்கை

### கூட்டணிக் குழுவிடம் உறுதி தெரிவிப்பு

கொழும்பு, செப். 24

கைதடிச் சம்பவத்துக்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் தலைமையில் கூட்டணித் தூதுக்குழு ஒன்று ஜனாதிபதியை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்தது அல்லவா?

அப்பொழுது யாழ்ப்பாணத்தில் இடம் பெறுவதாகக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல் குறித்து கூட்டணித் தூதுக் குழுவினர் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறினர்.

சமீப நாள்களில் 200 பேர் அளவில் அங்கு காணாமற் போனதாகவும் அவர்கள் கூறினர்.

சுண்டுக்குளியில் இருந்து கைதடி நோக்கிச் சென்ற செல்வி கிருஷாந்தி குமாரசாமி என்ற மாணவி காணாமற் போன சம்பவத்தையும்—அவரைத் தேடிச் சென்ற அவரது தாயார் சகோதரரார் மற்றும் அயலவர் இன்னும் வீடு திரும்பாததையும்—

கூட்டணித் தூதுக் குழுவினர் தமது வாதத்துக்கு ஆதரவாக எடுத்துக் கூறினர்.

ஜனாதிபதி பதில் அளிக்கையில், கைதடிச் சம்பவம் குறித்து தாம் ஏற்கனவே அறிந்திருந்ததாகத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்துக்குப் பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

அத்துடன் மனித உரிமை செயலணிக் குழுவின் கிளை ஒன்றை யாழ்ப்பாணத்தில் இயங்க வைக்க தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி கூட்டணித் தூதுக் குழுவினரிடம் தெரிவித்தார் என்று கொழும்பு பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது. (இ)

கவர்ச்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நூறு படங்களில் நடித்தவர்.

அவரது தனிப்பட்ட வாழ்க்கை குறித்து பல்வேறு கிசு கிசுக்கள் கூறப்பட்ட போதிலும் அவர் திருமணம் செய்திருக்கவில்லை.

(உ-3-10)

பரந்தனில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவது முயற்சி இது என்றும் பி.பி.ஸி. சுட்டிக் காட்டியது.

அப்போதிருந்தே அரசுப் படைகள் கிளிநொச்சிக்கு சற்று வடக்கே உள்ள பரந்தனில் தமது காப்பு நிலைகளை பலப்படுத்தி, தாக்குதல் நடத்துவதற்கான சரியான தருணத்துக்காக காத்திருந்தன என்றும் —

கடந்த ஒரு வாரமாக கடும் பீரங்கித் தாக்குதல்களும், வான் தாக்குதலும் இப்பகுதியில் நடத்தப்பட்டு வருவதாக புலிகள் தெரிவித்தனர் என்றும் —

பி.பி.ஸி. மேலும் தெரிவித்தது.

கிளிநொச்சியை நோக்கிய படை எடுப்பாக இது இல்லாமல்; கிளிநொச்சியின் கிழக்குப் பக்கமாக — ஒற்கு நோக்கிய படை நகர்வாக இது இருக்கின்றது என்றும் —

கிளிநொச்சி நகரத்தை நேரடியாகச் சென்று கைப்பற்றாமல் அதைச் சுற்றி வளைத்துப் பிடிக்கும் ஒரு முயற்சியாக இது இருக்கலாம் என்றும் —

இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி இராணுவ விமர்சகர் சிவராம் (தராக்கி) தெரிவித்தார். (உ-3-10)

## தமிழ்க்கட்சியுடன் அடுத்த வாரம் சந்திப்பு

கொழும்பு, செப். 24

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு மற்றும் அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வு யோசனைகள் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் ஏற்கனவே பேச்சுக்களை நடத்திக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய தமிழ்க்கட்சிகளுடன் அடுத்த வாரம் பேச்சுக்களை ஆரம்பிக்கும்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான அஷ்ரப் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அங்கம் பெறாத தமிழ்க் கட்சிகளுடனும் பேசவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-3)

## பாப்பரசரின் பிரெஞ்சு பயணம் முடிவு

பாரிஸ், செப். 24

பாப்பரசர் 2ஆம் அருளப்பர் சின்னப்பர் தமது பிரான்ஸ் நாட்டுத் திருப்பயணத்தின் இறுதி நாளான நேற்று முன்தினம் றோயின்ஸ் நகரில் குளோவிஸ் மன்னரின் நினைவாக பொதுத் திருப்பலி ஒன்றை நிறைவேற்றினார்.

(இ-10)

வட இந்திய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்களின் பெயர்கள் அடிபட்டன. இடைக்காலத் தலைவராக சீதாராம் கேசரி தெரிவு செய்யப்பட்ட போதிலும் இவ்வாண்டு இறுதியில் காங்கிரஸ் பொதுச்சபை கூடி புதிய தலைவரைத் தெரிவு செய்யும் போது அதில் போட்டியிட சரத் பவார், ராஜஸ் பைலட்போன்றோர்தயாராகி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வட இந்தியாவில் தாழ்த்தப்பட்ட இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவர் சீதாராம் கேசரி.

இந்தியாவின் மிகப்பெரும் மாநிலமான உத்தரப்பிரதேசத்தில் விரைவில் நடைபெறவுள்ள தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு சீதாராம் கேசரியின் தெரிவால் சில சாதக விளைவுகள் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-3-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுஅச்சகத்தில் 24-09-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org